# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,926 – 1970 ඔක්තෝබර් 2 වැනි සිකුරාදා—1970.10.2

14,926 ம இலக்கம்—1970 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 2 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்யுமாப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் .. .. .. | 891 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 910 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 911 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் . | 915 | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | 916 |


## பதவிகள் — வெற்றிடம்

### "இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறு

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1970 ம் ஆண்டு யூன் மீ 2 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

*வதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

*குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.*

***5. வேண்டிய தகைமைகள்.***—*விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.*

***6. யுத்தசேவைச் சலுகை.***—*ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

***7. பிற தேவைகள்.***—*(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவைக் ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.*

---

No. AA. 75/X.2278/70

**கல்வி அமைச்சு**

**பதவி—வேலைக்கள எந்திரவியலாளர் II ந் தரம்**

கல்வி அமைச்சின் கீழுள்ள அம்பாறை " ஹாடி " சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்தில் வேலைக்கள எந்திரவியலாளர், II ஆந் தர பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, " செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 " என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 16.10.1970.
(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 23.10.1970.

**குறிப்புகள்.**—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவரா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவுசெய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுபவர் கைம்பெண், அநாதை இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு கட்டணம் செலுத்த வேண்டும். நியமதாரி முதற்கண் 3 வருட காலத்திற்கு தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

3. **சம்பளமும் சகாயப்படிகளும்.**—இப்பதவிக்குரிய ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூ. 6,720–360–11,040–வருடாந்தம்.

**குறிப்பு.**—(i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் எந்திரவியல் பட்டதாரிகள் அல்லது விஞ்ஞான முதுமாணி அல்லது கலாநிதி போன்ற அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் தகைமைகளைப் பெற்றுள்ளவர்கள் ஆரம்பச் சம்பளமாக வருடாந்தம் ரூ. 7,800 பெறுதற்கு உரித்துடையவராவர்.

(ii) பல்கலைக் கழகத்தில் அல்லது சமமான மட்டத்தில் 3 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றுள்ள பட்டதாரிகள் திறைசேரி அனுமதியுடன் வருடாந்தம் ரூ. 7,800/– என்ற சம்பளப் படியில் வைக்கப்படலாம். ஏற்கெனவே அரசினர் சேவையிலுள்ள அபேட்சகர் ஒருவர் தெரிவுசெய்யப்படின், அவருடைய சம்பளம் 13.6.59 ஆந் திகதிய 492 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தால் திருத்தப்பட்டதற்கிணங்க 26.2.57 ஆந் திகதிய 361 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருப விதிகளுக்கமையத் தீர்மானிக்கப்படும்.

(iii) குடிசார் எந்திரவியலாளர் கூட்டுறுப்பினர் நிறுவன அல்லது பொறிமுறை எந்திரவியலாளர் கூட்டுறுப்பினர் நிறுவன அல்லது மின்சார எந்திரவியலாளர் கூட்டுறுப்

பினர் நிறுவன தகைமை போன்ற பூரண உயர்தொழிற் தகைமை பெற்றுள்ளவர்கள் ஆரம்பச் சம்பளமாக வருடாந்தம் ரூ. 9,960 பெறுதற்கு உரித்துடையராவர்.

அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் எந்திரவியல் பட்டதாரிகளாகவுள்ள II ஆந் தர விரிவுரையாளர்கள் தமது சம்பள அளவுத் திட்டத்தின் உச்சிப் படியை—அதாவது, வருடாந்தம் ரூ. 11,040/—ஐ அடைந்து ஒரு வருடம் அச்சம்பளப் படியில் சேவை புரிந்திருப்பின் ரூ. 480—வீதம் வருடாந்த உயர்ச்சிச் சம்பளங்கள் பெற்று வருடாந்தம் ரூ. 13,440—வரை சம்பளம் பெறுதற்கு உரித்துடையவராவர்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவராக திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1970.10.16 ஆந் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ் வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை ஏற்கெனவே அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு அமையாது.

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் பொறிமுறை எந்திரவியலில் வழங்கப்படும் எந்திரவியல் பட்டம் அல்லது சமமான அல்லது உயர்ந்த தகைமைகள் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(ii) பொறிமுறை எந்திரவியலாளர் கூட்டுறுப்பினர் நிறுவன தகைமைப் பரீட்சையின் (அ) ஆம் (ஆ) ஆம் பகுதிகளில் தேறியிருப்பதுடன் வேலைக்களம் ஒன்றில் 3 வருட அனுபவம் பெற்றிருக்கவேண்டும்.

அல்லது

(iii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில்நுட்ப நிலையத்தால் வழங்கப்படும் எந்திரவியல் தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றிருப்பதுடன் வேலைக்களம் ஒன்றில் 3 வருட அனுபவம் பெற்றிருக்கவேண்டும்.

(ஈ) சிங்களத்தில் கற்பித்தற்கான ஆற்றல் பெற்றிருக்க வேண்டும் அல்லது நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் சிங்களத் தேர்ச்சி பெறவேண்டும்.

5. விண்ணப்பதாரிகள், பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும்;—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்கள்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்கு பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது), அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

எஸ். பீ. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1, 1970.9.25.

10—183/1—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926

---

No.: AA 32/X. 2 7 /

## கல்வி அமைச்சு

### தொழில்நுட்பக் கல்விப் பயிற்சி உத்தியோகத்தர் பதவி

கல்வி அமைச்சிலுள்ள தொழில்நுட்பக் கல்விப் பயிற்சி உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, " செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 " என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள்—16.10.1970.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—23.10.1970.

**குறிப்புகள்.**—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவரா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்

நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—(i) இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுபவர் கைம்பெண், அனாதை இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு கட்டணம் செலுத்த வேண்டும். இப்பதவிக்கு பெண் ஒருவர் நியமிக்கப்படின் அவர் சேமலாப நிதி நலன்களுக்கு உரித்துடையவராவர் ; அதற்கு அவர் தனது சம்பளத்தில 5% த்தை அரசினர் சேவை சேமலாப நிதிக்குச் செலுத்தவேண்டும். பெண் உத்தியோகத்தர் ஒருவர் சேமலாப நிதிக்குத் தொடர்ந்து கட்டணம் செலுத்தவா அல்லது உபகாரச் சம்பளத் திட்டத்துக்கு மாற்றப்படவா விரும்புகிறாரென 10 வருட சேவையைப் பூர்த்தி செய்யுமுன் எந்நேரத்திலேனும் தெரிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் உபகாரச் சம்பள விதிகளின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடைய ஆசிரியராக அல்லது சேமலாப நிதி நலன்கொண்ட ஒரு பதவியில் ஏற்கனவே 10 வருட சேவை புரிந்திருப்பின் நியமனத் திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் இவ்விருப்பம் தெரிவிக்கப்பட வேண்டும்.

(ii) நியமனம், முதற்கண், 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும். நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான பதவி ஒன்றினை அரசாங்க சேவையில் ஏற்கனவே வகிக்கும் ஓர் உத்தியோகத்தர் நியமனத்துக்குத் தெரிவு செய்யப்படின் அவர், முதற்கண் ஒரு வருடத்துக்குப் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார்.

(iii) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி, நியமனத் திகதியிலிருந்து மூன்று வருட காலத்துக்குள் அரசினர் சேவை விதிகளிலும் பிரமாணங்களிலும் (1) அரசினர் சேவை ஆணைக்குழு விதிகளும் நிர்வாக விதிகளும் (2) கல்விச்சட்டம் (3) நிதிப் பிரமாணங்கள் ஆகியவற்றிலான மூன்று வினாப் பத்திரங்களைக்கொண்ட ஒரு பரீட்சையில் சித்தியடைய வேண்டும். விதிக்கப்பட்ட காலம் முடிந்த பின்னரே நியமதாரி இப்பரீட்சையில் சித்தி அடைந்தால் கூடுதலாக எடுக்கப்படும் காலம் உயர்ச்சிப் பணம் பிற்போடப்பட்ட காலமாகக் கருதப்படும்.

(iv) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி, நியமனத் திகதியிலிருந்து நாலு வருட காலத்துக்குள் பொது எழுதுவினைஞர் சேவையின் நிறைவேற்று எழுது வினைஞர் வகுப்பு II ஆந் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள சிங்கள/தமிழ் தேசிய மொழிப் பரீட்சையில், காரியத்துக்கேற்ப, சிங்கள/தமிழ் மொழியில் சித்தியடைய வேண்டும். விதிக்கப்பட்ட காலம் முடிந்தபின்னரே இப்பரீட்சையில் சித்தி அடையப்படின் கூடுதலாக எடுக்கப்படும் காலம் உயர்ச்சிப்பணம் பிற்போடப்பட்ட காலமாகக் கருதப்படும்.

**3. சம்பள அளவுத் திட்டம்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூ. 11,040—11 × 480—ரூ. 16,320 (ஒன்றுதிரட்டிய-வருடாந்தம்)

ரூ. 14,880 க்கு முன் வினைத் திறமைகாண் தடை.

**4. தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாகத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(i) சிறந்த நல்லொழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ii) 16.10.1970 அன்று 30 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.

(iii) (அ) எந்திரவியலையே தமது தொழிலாகக் கொண்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட எந்திரவியலாளர் நிறுவனத்தின் கூட்டுறுப்பினராக இருக்க வேண்டும்.

அல்லது (ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் எந்திரவியல் பட்டதாரியாக இருக்க வேண்டும்.

அல்லது (இ) அரசினர் திணைக்களம் ஒன்றில் எந்திரவியலாளர் பதவியை வகிக்கும் ஓர் உத்தியோகத்தராக இருக்க வேண்டும். (பதவியுயர்ச்சி சம்பந்தமான திணைக்களத் திட்ட அடிப்படையில் எந்திரவியலாளர் தரத்துக்குப் பதவியுயர்ச்சி அளிக்கப்பட்டும் உயர்தொழில் தகைமைகளைப் பெற்றிராதவர்களின் விண்ணப்பங்களும் சீர்தூக்கப்படும்).

அல்லது (ஈ) தொழில் நுட்பவியல் பாடங்களைப் படிப்பிப்பவரும் வருடாந்தம் ரூ. 7,400 க்குக் குறையாத அடிப்படைச் சம்பளம் பெறுபவருமான சிரேட்ட அல்லது விசேட போதனாசிரியராக இருக்க வேண்டும்.

அல்லது (உ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றால் வழங்கப்படும் விஞ்ஞானப் பட்டம் பெற்ற கனிட்ட தொழில்நுட்ப அதிபராக இருக்க வேண்டும்.

(iv) (அ) iii (அ) வின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளவர்கள் 5 வருட செயல்முறை/கற்பித்தல் அனுபவம் அல்லது இவ்விரு அனுபவங்களும் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது (ஆ) iii (ஆ) ஆம், (ஈ) ஆம் அல்லது (உ) ஆம் பந்திகளில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளவர்கள் 10 வருட செயல்முறை/கற்பித்தல் அனுபவம் அல்லது இவ்விரு அனுபவங்களும் பெற்றிருக்க வேண்டும்.

(V) சிங்கள மொழிமூலம் கற்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும் அல்லது 3 வருட காலத்துக்குள் சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு**—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக் கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச்சான்றிதழ்கள் ;

(இ) குணச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.**—i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ ஆ ” எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ அ ” எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறாவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

எஸ். பி. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1, 1970 ம் ௵ செத்தெம்பர் ௴ 25 ந் உ.

10–183/2— 2.10.70 ந் திகதி வர்த்தமானி இல.14,926

No. : A. 88/X2230/69

## தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

### புள்ளிவிபர வல்லாளர் பதவி

தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தில் புள்ளிவிபர வல்லுனர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களிலான விண்ணப்பங்கள் பின்வரும் திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்குமாறு செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, த. பெ. இல. 500, கொழும்பு 1, எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் :—

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள் : 1970.10.16.

(ஆ) வெளியூர் விண்ணப்பங்கள் : 1970.10.23.

குறிப்பு.—(i) அச்சிட்ட விண்ணப்பப்படிவத்தை தபால் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் சொந்த முகவரியிட்ட 9" × 4" அளவிற்குக் குறையாத " முத்திரையிடாத " கடிதவுறையொன்றை அனுப்புவதோடு விண்ணப்பக்காரராக விரும்புபவர் அரசாங்க சேவையிலுள்ளவரா, அல்லாதவரா என்பதையும் மிகத் தெளிவாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவம் அல்லது அப்படிவம் தொடர்பான கடிதம் தபாலில் தவறிவிட்டதாகவோ அல்லது தாமதமாகிவிட்டதாகவோ கூறும் குற்றச்சாட்டுகள் எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு கடைசித்தினம்வரையும் தாமதிப்போர் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவார்.

(iii) வெளியூர் விண்ணப்பக்காரர்கள் அச்சிட்ட விண்ணப்பப்படிவங்களை நாட்டிலுள்ள இலங்கைப் பிரதிநிதிகளின் அலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம். அவர்கள் விரும்பின் விண்ணப்பப்படிவங்களை விதித்த கால எல்லைக்குள் தாம் வதியும் நாட்டுக்குரிய அல்லது அதற்கு மிகக் கிட்டிய நாட்டிலுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு அனுப்பி இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு அனுப்புமாறு செய்விக்கலாம்.

(iv) மருத்துவச் சோதனையும் பயணச்செலவும்.—இலங்கை அரசாங்கத்தின் கழ நியமனம் பெறுவதற்குத் தெரிவு செய்த வெளிநாட்டிலுள்ள இலங்கை உத்தியோகத்தர்கள் சேவைக்கேற்ற உடல் நலமுடையவர்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பயிற்சியாளரிடம் மருத்துவச்சோதனை பெறுவதற்குச் சமுகமளிக்க வேண்டும். அத்தகைய மருத்துவச் சோதனைக்காய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்கான செலவையும் அவ்வுத்தியோகத்தர்களே கொடுக்கவேண்டும்.

(2) தொழில் நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—பதவி நிரந்தரமானதும் உபகாரச்சம்பளமுடையதுமாகும். ஆண் அபேட்சகர்கள் நியமிக்கப்படும் திகதியிலிருந்து மூவாண்டுக்காலம் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவர். பெண் அபேட்சகர்கள் முதலில் சகாயநிதி அடிப்படையில் நியமிக்கப்பட்டு நியமனத்திகதியிலிருந்து மூவாண்டு காலம் பரீட்சை நிலையிலிருப்பர். இவர்கள் பத்தாண்டுக்காலச் சேவை முடிவடையுமுன் எக்காலத்திலாவது உபகாரச் சம்பள முறையில் சேர்ந்து கொள்ளும் உரிமையுடையவராவர். ஒருமுறை அவ்விருப்புரிமையைப் பிரயோகித்துக்கொண்டபின்னர் அதை நிராகரிக்கவியலாது.

அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமானதும் உபகாரச் சம்பளமுடையதுமான நியமனத்தை வகிக்கும் உத்தியோகத்தரொருவர் நியமனத்திற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பதிலாகக் கடமையாற்ற நியமிக்கப்படுவார்.

(3) சம்பளமும் படிகளும்.—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத்திட்டம் 6,720 ரூபாவில் ஆரம்பித்து வருடமொன்றுக்கு 360 ரூபா வீதம் 12 வருடாந்த சம்பள ஏற்றங்களையும் 480 ரூபா வீதம் 11 வருடாந்த சம்பள ஏற்றங்களையும் பெற்று உயர்வடைந்து 16,320 ரூபாவை அடையும். வருடத்திற்கு 11,520 ரூபாவையும் 14,880 ரூபாவையும் அடையுமுன்னர் வினைத்திறமைகாண் தடைகள் இடம் பெறும்.

(4) தேவையான தகைமைகள்.— ஒவ்வொரு விண்ணப்பக்காரரும் பின்வரும் தகைமைகளுடையவர் என்பதற்குத் திருப்தியான சான்றுகளைக் காட்டவேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1970.10.16 ந் திகதியன்று 22 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயுமிருக்கவேண்டும். (இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை இத்திணைக்களத்தில் உள்ளவர்களுக்கு அமையாது.)

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் சிறப்புப்பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பின்வரும் பாடங்களான, புள்ளிவிபரவியல், கணிதம், பொருளியல், குடிவிபரப்புள்ளி விபரவியல், சமூகவியல், மானிடவியல் ஆகியவற்றில் ஏதாவதொன்றில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பையோ அல்லது உயர்தரப் பட்டதாரிப் பட்டத்தையோ ;

அல்லது

(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கணிதம் ஒரு பாடமாகப் பொதுப் பட்டத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பையோ உடையவராக இருக்க வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (முக்கிய குறிப்பு.— சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத்தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழகப்பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) நன்னடத்தைச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழில் நுட்பத்தகைமையும் உயர் தொழிற்றகைமை அல்லது தொழில் நுட்பத்தகைமை பற்றிய சான்றிதழ்;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு : (1) சாதனங்களையாயினும் சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் தினத்தன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத்தொடர்புகளையும் செயலாளர் அரசாங்க சேவை ஆணைக்குழு, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன ; அவற்றைப் பார்க்க

9. விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது) அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்கசேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையவராகார்.

எஸ். பி. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இல. 500, காலிமுகச் செயலகம்,
கொழும்பு.
1970.9.25.

10–183/3—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926

இல. AB 44/X. 2281/70.

## தகவல் பகுதி

### அத்தியட்சர் பதவி—அரசாங்க பிரசுரம் பிரிவு

தகவல் பகுதியின் அரசாங்க பிரசுரப் பிரிவின் அத்தியட்சர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, அ. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரிக்குப் பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 16.10.1970 ;

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 23.10.1970.

**குறிப்பு.**—(1) அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப் பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரை யிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத் தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும் விண்ணப்பதாரி அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(2) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய விண்ணப்பப் படிவம் கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமத மாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற் குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(3) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(4) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளி நாட்டிற் தெரிவுசெய்யப்பட்ட இலங்கையரான உத்தி யோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலமுடைய வர்களாயிருக்கின்றார்களா வென்பதை உறுதிப்படுத்துவ தற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ பணியாற்றுவோரிடம் செல்லு மாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும், இலங்கைக்கு பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே செலுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தர மானதும் இளைப்பாற்றுச் சம்பளம் உடையதுமாகும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் விதவை அநாதைகள் நிதிக்குப் பணஞ் செலுத்துமாறு கோரப்படுவார். நியமனம் பெறுபவர் முதலில் மூன்று ஆண்டுகளுக்குத் தகுதிகாண் அடிப்படையில் பணிபுரிவார்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள விகிதம் வருமாறு :—வருடமொன்றுக்கு ரூ. 6,720—12 × 360—ரூ. 11,040.

**குறிப்பு.**—அரசாங்கத்தில் நிரந்தரமான இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால், அன்னார் இரண்டு வருட காலம் பதில் சேவையாளராகக் கடமையாற்றுவார்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையவர் என்பதற்குத் திருப்தியான சான்றிதழ்கள் காட்ட வேண்டும் :—

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும், உடல்நலமுடையவ ராயும் இருக்கவேண்டும் ;

(ஆ) 16.10.1970 ல் 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்கவேண்டும் ;

(இ) நிர்வாகத்திலும், கணக்குவைப்பதிலும், பண்டகசாலை அலுவல் களிலும் ஐந்து வருடங்களுக்குக் குறையாத அனுபவம் வாய்ந்த ஓர் அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகப் பட்டதாரியாகவும், சிங்கள மொழியில் நன்கு பரிச்சயமுடையவராகவும், நூல் நிலைய நிர்வாகத்தில் அனுபவமுடையவராகவும் இருத்தல் வேண்டும் ;

(ஈ) நிர்வாகத்திலும், கணக்குவைப்பதிலும், பண்டகசாலை அலுவல் களிலும் ஐந்து வருடங்களுக்குக் குறையாத அனுபவம் வாய்ந்தவ ராகவும், சிங்கள மொழியில் நன்கு பரிச்சயமுடையவராகவும், நூல்நிலைய நிர்வாகத்தில் அனுபவமுடையவராகவும் இருப்பின் அன்னவர்களின் வயது, கல்வித் தராதரம் விதிவிலக்காகும்.

(1) ஈ. ஸி. ஸி. முதலாம் வகுப்பு அல்லது அதற்கு மேல் வகுப்பு பொது எழுதுவினைஞர் சேவையில் அல்லது அதற்குச் சம மான சேவைகளில் இருப்போர்.

(2) அரசாங்க பிரசுரப் பிரிவில் உதவி சுப்பிரிண்டன் பதவி வகிப்பவர்.

**குறிப்பு.**—தமிழிலும், ஆங்கிலத்திலும் செயலாற்றும் திறன் ஓர் மேலதிகத் தராதரமாகும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு :** சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலை களுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது ஆக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு, இவற்றுள் ஒன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றவையா யிருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற்றகைமை அல்லது, தொழில்நுட்பத் தகைமை ஆகியவை பற்றிய சான்றிதழ்கள் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் பிரதிகளை யாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக் கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்கும்படி வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர் களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப் பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப் படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப் படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ ஆ ” எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்பு களையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட் டனுப்ப வேண்டுமேயன்றி இந்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோ கத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காகிய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், (II) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன, அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ அ ” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது), அதன் கண் அறி வுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்களுக்கு விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட் டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையவராகார்.

எஸ். பீ. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500, காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் ௵ செப்தெம்பர் ௴ 25 ந் உ.

10—183/4—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926

இல : AB 88/X 2282/70

## கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு

### கைத்தொழில் உத்தியோகத்தர் பதவி

கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் கைத்தொழில் ஒழுங்குவிதி பகுதியில் கைத்தொழில் உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அச்சிட்ட படிவங்களில் எழுதப்பட்டு பின்வரும் திகதியில் அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடியதாக எனக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 1970.10.16 ;

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1970.10.23.

**குறிப்பு.**—(i) அச்சிட்ட விண்ணப்பத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவுக்குக் குறையாததும், முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்துடன் அனுப்புதல் வேண்டும். அபேட்சகராக இருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதை விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவத் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாயிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு கடைசித் திகதிவரை பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவார்.

(iii) வெளிநாட்டிலுள்ள பரீட்சார்த்திகள் அச்சிட்ட விண்ணப் பப் படிவங்களை பிறநாடுகளில் உள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். அப்பரீட்சார்த்திகள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகவும் அருகிலுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும் :**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவுசெய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவர்களாயிருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவ சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :**—பதவிகள் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்பட்டதுமாகும். நியமனம் மூன்று ஆண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் உள்ளதாயிருக்கும். தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர்கள் நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் சேவையில் உறுதிப்படுத்துவதற்கு முன்பாக பின்வரும் பாடங்களைக் கொண்டு பரீட்சையொன்றில் சித்தியடைய வேண்டப்படுவர் :—

(i) நிதிப்பிரமாணம் ;

(ii) பரிபாலனப் பிரமாணங்களும் அரசாங்க அதிகாரச் சபையின் ஒழுங்குவிதிகளும். இந்தப் பரீட்சையின் நிலைமை இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்களுக்கு நடைபெறும் முதலாம் திறமை கடப்புப்படிப் பரீட்சைக்கு சமமாகும் ;

(iii) தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர் ஒருவர் உள்நாட்டிலோ அல்லது பிறநாட்டிலோ பயிற்சி ஒன்றைப் பெறுவதற்கு ஆயத்தங்கள் செய்யக்கூடும். பயிற்சி பெறவேண்டிய காலம் சாதாரணமாக 6 மாதத்திற்கும் 12 மாதத்திற்கும் உட்பட்டதாகும். இந்தப் பயிற்சி சம்பந்தமான செலவுத் தொகைவகைகள் அவ்வக் காலத்தில் நிலவும் அரசாங்க விதிகளுக்கு அமைய வழங்கப்படும். அப்படியான ஒரு பயிற்சியில் புகுவதன்முன் இலங்கை அரசாங்கத்துடன் அபேட்சகர் ஒரு உடன்படிக்கை செய்யுமாறு வேண்டப்படுவர்—

(அ) பொறுப்பெடுக்கும் மற்றைய கருமங்களுடன் குறிக்கப்பட்ட பயிற்சியை உண்மையாகவும், ஊக்கந்தவருமலும் பின்பற்றி அதை திருப்திகரமாக நிறைவு செய்து, பயிற்சி முடிந்த பின்பு அரசாங்கம் விரும்பினால் அரசாங்கத்திற்கு வேண்டிய கால எல்லைக்கு (அரசாங்கம் தீர்மானிக்க வேண்டியது) சேவை புரியவேண்டும். மேலும்,

(ஆ) இப்பயிற்சியால் ஏற்பட்ட முழுச் செலவுகளையும் இலங்கை அரசாங்கத்திற்குத் திருப்பிக் கொடுக்கப் பொறுப்பெடுத்து, அதாவது இலங்கை அரசாங்கத்தினால்/உடன்/அல்லது நல்கும் நிறுவனத்தால் இந்த முழுப் பயிற்சிக்கான செலவுகள் யாவையும் (குறிப்பாக சம்பளம், உதவுத் தொகைகள், பிரயாணச் செலவு, கட்டணம் ஆகியன) உடன்படிக்கையிலுள்ள நியதி நிபந்தனைகளுக்கேற்ப அவர் ஒழுகத் தவறினால் திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்கு திரட்டிய சம்பளம் பின்வருமாறு :—

வருடச் சம்பளம் ரூபா 6,720 இல் ஆரம்பமாகி வருடம் ரூபா 360 கொண்ட 12 வருட உயர்வுகளால் வருடச் சம்பளம் ரூபா 11,040 வரை உயரும்.

4. **தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமையுடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராகவும் உடல் நலமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 1970.10.16 ந் தேதியில் 22 வயதுக்கு குறையாதவராயும் 35 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு உயர்ந்தவயதுக் கட்டுப்பாடு கிடையாது.)

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகப் பட்டம் பெற்ற பட்டதாரியாக இருக்கவேண்டும்.

**குறிப்பு.**—பிரதான பரிசோதகரும் (5 வருட சேவை அத்தரத்திலுள்ளவராயிருந்தால்) அபிவிருத்தி பகுதியிலுள்ள 5,880 ரூபா வருட சம்பள எல்லையை அடைந்த பரிசோதகர்களும், 15 வருட சேவை அத்தரத்தில் பூர்த்தியானவர்களும், கல்வித் திறமைகளின்றி விண்ணப்பிக்க உரியவர்களாவர். ஆனால் அவர்களின் பகுதித் தலைவரால், அதிவிசேஷ தகுதி உள்ளவர்களென சிபார்சு பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும் பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு:** சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக் கழகப் பட்டம் அல்லது மிக உயர்ந்த சான்றிதழ் ;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு, இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.**—(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(ii) சாதனங்களை சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும், அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்குமுன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்பட்ட அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ ஆ ” எனக் குறிப்பிட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்டனுப்பவேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம் II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பி திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி கேட்கும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

எஸ். பீ. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 25 ந வ.

10–183/5—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926

---

இல. AB 96/X2283/70.

## சௌக்கியத் திணைக்களம்

### பொதுச் சௌக்கிய மிருக வைத்திய உத்தியோகத்தர் பதவி

சௌக்கியத் திணைக்களத்தில் பொதுச் சௌக்கிய மிருக வைத்திய உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 16.10.1970;
(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 23.10.70.

குறிப்பு.—(i) அச்சிட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல்மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும், 9" × 4" அளவிற்குக் குறையாததும், முத்திரையிடப்படாததுமான கடித உறை ஒன்றினை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவரா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்களை அனுப்புவதற்குக் கடைசித்திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை பிற நாடுகளிலுள்ள இலங்கை அரசாங்க பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும், பயணச் செலவும்**.—இலங்கை அரசாங்கத்தின்கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுந்த உடல்நலமுடையவர்களாக இருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச்சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுபவரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும், அவர்கள் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **அலுவல் நியதிகளும், சேவை நிபந்தனைகளும்**.—(அ) பதவி நிரந்தரமானதுடன் இளைப்பாற்றுச் சம்பளத்துக்கும் உரியது.

(ஆ) தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர் பொதுச் சௌக்கிய மிருக வைத்திய வேலையில் பயிற்சி அளிக்கப்படுதற்கு ஒரு புலமைப் பரிசிலின் வெளிநாட்டுக்கு அனுப்பப்படலாம்.

3. **சம்பளமும், படிகளும்**.—இந்தப் பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—

ஆண்டொன்றுக்கு ஆரம்பச் சம்பளம் ரூபா 6,720—360 வீதம் 12 உயர்ச்சிகளுக்கும், 480 ரூபா வீதம் 11 உயர்ச்சிகளுக்கும் பின்னர் இறுதிச் சம்பளம் ரூபா 16,320.

தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் ஆண்டொன்றுக்கு ரூபா 11,040 க்கு மேல் சம்பளம் பெறுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பொதுச்சௌக்கிய மிருக வைத்திய அறிவியலில் பட்டமேற்படிப்புத் தகைமை பெறுதல்வேண்டும்.

குறிப்பு.—தகுதித் தேர்வுப் பத்திரம் (டிப்ளோமா) உள்ளவர்களின் விடயத்தில் விவசாயத் திணைக்களத்தில் 1.4.54 க்கு முன்பு சேர்க்கப்பட்ட உதவி மிருக வைத்திய உத்தியோகத்தர்களுக்கு மட்டும் மேற்படி சம்பள அளவுத்திட்டம் பொருந்தும்.

4. **தகைமைகள்**.—ஒவ்வொரு அபேட்சகரும், தான்—,

(அ) நற்குணமும், தேகாரோக்கியமும் உடையவரென்றும்,

(ஆ) 1970.10.16,தேதியில், 30 வயதுக்குக் குறையாதவரென்றும், 45 வயதுக்கு மேற்படாதவரென்றும், (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு மேல்வயதெல்லை இல்லை).

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்திலிருந்து அல்லது தாபனத்திலிருந்து மிருக வைத்திய அறிவியலிற் பட்டம் பெற்றுள்ளவரென்று, அல்லது

(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது தாபனத்தில் மிருக வைத்திய அறிவியலில் தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றிருப்பதுடன் ஒரு மிருக வைத்திய உத்தியோகத்தராகக் குறைந்தது 5 வருட அனுபவம் உள்ளவரென்றும் திருப்திகரமான சான்றுகளைச் சமர்ப்பிக்கவேண்டும்.

(iii) பொதுச் சௌக்கிய மிருக வைத்திய வேலைத்துறையில் உள்ள அனுபவம் ஒரு மேலதிக தகைமையாக இருக்கும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் ஏதாவதொன்றை அல்லது முழுவதையும் கேட்கும் நேரத்தில் அனுப்புமாறு கோரப்படுவர் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**கவனிக்க**.—ஞானஸ்நானப் பத்திரங்கள் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) ;

(ஆ) பட்டம் அல்லது உயர் கல்விச் சான்றிதழ் ;

(இ) இரண்டு நற்குணச் சான்றிதழ்கள். ஒன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர்தொழிற்றகைமைச் சான்றிதழ் அல்லது தொழில்நுட்பத் தகைமைச்சான்றிதழ் அன்றேல் அவை இரண்டும்.

(உ) சிங்களத்தில் சித்தியெய்திய உயர்பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(i) விண்ணப்பப் படிவத்துடன் சாதனங்களோ, சாதனங்களின் பிரதிகளோ இணைக்கப்படக் கூடாது.

(ii) சாதனங்களைக் கேட்கும்போது சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்கள் வேலை செய்யும் அரசாங்கத் திணைக்களங்களின் தலைவர்களுக் கூடாக அனுப்பப்பட வேண்டும். எனினும், அவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பிய திகதியை அரசாங்கசேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பங்களை ஏற்பதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்குச் சேரக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் ("ஆ" அடையாளமிட்டு) விண்ணப்பகாரர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட தபாலட்டை இந்நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படலாம்.

7. விண்ணப்பங்களும், அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளும், அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு விலாசமிட்டு அனுப்பப்பட வேண்டுமேயொழிய இந்தத் திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்கும் நேராக அனுப்பப்படக்கூடாது.

8. இந்த வர்த்தமானப் பத்திரிகையின் I ஆம் பகுதி, II ஆம் பிரிவின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்கசேவை பதவி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.

9. விண்ணப்பப் படிவத்துடன் வழங்கப்படும் ("அ" அடையாளமிடப்பட்ட) அச்சிட்ட தபாலட்டையை அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கமைய அபேட்சகர் ஒழுகியும் விண்ணப்பங்களை ஏற்கும் கடைசித் தினத்திலிருந்து மூன்று வாரங்களுக்குள் அவை கிடைத்தமைபற்றிய அறிவித்தலைப் பெறாதுவிடின் உடனே அரசாங்கசேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமையெதுவும் உடையராகார்.

எஸ். பீ. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலகம்,
த. பெ. இலக்கம் 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் செத்தெம்பர் மீ 25 ந உ.

10–183/6—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926

---

இல. : AB 94/X 2284/70

## கமத்தொழிற்றிணைக்களம்

### கமத்தொழிற் பொருளாதார நிபுணர் பதவி (முதலாம் படிமுறை)

கமத்தொழிற்றிணைக்களத்தில் முதலாம் படிமுறை கமத்தொழிற் பொருளாதார நிபுணர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, த. பெ. எண் 50?, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதிகளில் அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 1970.10.16 ;

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1970.10.23.

**குறிப்பு :**

(i) அச்சிட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல்மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரி இடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும் விண்ணப்பிக்கும் அபேட்சகர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறி விட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப்படிவங்களை பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்க பிரதிநிதிகளின் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் விசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்குச் சமீபமாயுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு அனுப்பிவைக்கலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலம் உடையவர்களாக இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவர். அத்தகைய மருத்துவச்சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப்பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவையின் நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையனவுமாகும். நியமதாரி முதற்கண், மூன்று வருட காலத்திற்குத் தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

3. **சம்பளமும் ஏனைய படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு :—

இப்பதவிக்குரிய திரட்டிய வேதனம் பின்வருமாறு :—

ஆண்டொன்றுக்கு ரூபா 17,040/- முதல் ரூபா 18,840/- வரை, ரூபா. 600/- கொண்ட வருடச்சம்பள உயர்வுகள் மூன்று (1.10.69 க்குமுன் இருந்த இதற்குத் தொடர்பான அடிப்படைச் சம்பளத்திட்டம் ஆண்டொன்றுக்கு ரூபா 13,800/- முதல் ரூபா 15,600/- வரை, ரூபா 600/- கொண்ட ஆண்டுச் சம்பள உயர்வுகள் மூன்று)

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் சமர்ப்பிக்கவேண்டிய திருப்திகரமான சான்று, அவர்—

(அ) சிறந்த நற்குணமுடையவராயும் உடல்நலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 1970.10.16 ந் தேதியில் 35 வயதிற்குட்படாதவராயும் 45 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். (இவ்வயதுக்கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது)

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தால், கமத்தொழிற் பொருளாதாரவியலில் அல்லது கமத்தொழிலியலில், அல்லது பொருளாதாரவியலில் கலைமாணி அல்லது கலைஞானிப் பட்டம் பெற்றவராயும் அல்லது இவைகளுக்குச் சமமான தகைமை யுடையவராகவும்.

(2) கமத்தொழிற் பொருளாதாரவியலில் சிறப்புடைமையுடைய முதுமானி அல்லது முதுஞானி அல்லது கலாநிதிப்பட்டம் போன்ற உயர்பட்டதாரியாகவும், அரசினர் சேவையில் அல்லது வர்த்தகஸ்தாபனச் சேவையில் கலைமாணி அல்லது கலைஞானிப்பட்டம் பெற்றபின்பு பத்து ஆண்டு சேவை அனுபவம் அல்லது முதுமாணி அல்லது முதுஞானி அல்லது கலாநிதி போன்ற உயாப்பட்டம் பெற்ற பிற்பாடு, அரசினர் சேவையில் அல்லது வர்த்தக ஸ்தாபனச் சேவையில் ஐந்து ஆண்டு அனுபவச் சேவையுமுள்ளவராயுமிருத்தல் வேண்டும்.

**குறிப்பு :**

தேவைப்படும் தகைமையுடனும் சேவை அனுபவத்துடனும் விண்ணப்பதாரர் இல்லாது போனால் விண்ணப்பதாரர்களுக்குள் குறைந்த சேவை அனுபவமுள்ளவராயினும் கூடியதகுதி வாய்ந்தவரையே தெரிவு செய்யப்படும்.

5. அபேட்சகர் பின்வரும் சாதனங்களில் எதையேனும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கப்படும்பொழுது அவைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப்பத்திரம் (மு. கு.—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச்சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச்சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித்தராதரப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு—இவற்றிலொன்று ப டப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில்நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்கள, தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு :**

(i) சாதனங்களையாயினும் சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப்பத்திரத்துடன் இணைக்கக்கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களை தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் அனுப்பிய விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித்திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்

கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக்குறிப்பிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத்தொடர்புகளையும், செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, என முகவரியிட்டனுப்பவேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளை இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள, அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக்கடைசித் திகதி யிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தை கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையவராகார்.

எஸ். பீ. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக் குழுவின் அலுவலகம்,
த. பெ. எண் 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு,
1970.9.25

10—183/7—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926

---

எண் AB. 57/X 2285/70

## ஆயுள்வேத திணைக்களம்

### வைத்தியசாலை மருத்துவ அத்தியட்சர் பதவி (தரம் II)

ஆயுள்வேத திணைக்களத்தின் வைத்தியசாலை (தரம் II) மருத்துவ அத்தியட்சர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தினால் அளிக்கப்படும் அச்சிட்ட படிவங்களில் செய்யப்பெற்று, செயலாளர் அரசாங்க சேவைஆணைக்குழு, த.பெ. இல. 500, கொழும்பு – 1 என்ற முகவரியில் பின்வரும் திகதிகளில் அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள் : 1970.10.16 ;

(ஆ) வெளியூர் விண்ணப்பங்கள் : 1970.10.23.

**குறிப்பு**.—(i) அச்சிட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் முகவரி இடப்பட்டதும், 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான உறை ஒன்றினை தமது கடிதத்துடன் அனுப்புவதோடு, அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவை உத்தியோகத்தவரா அல்லாதவரா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும் ;

(ii) விண்ணப்பம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதிக்கப்பட்டது எனக்கூறப்படும் குற்றச்சாட்டுகள் எதுவும் கவனிக்கப்படமாட்டாது. தங்கள் விண்ணப்பங்களை இறுதி நாட்கள்வரை தாமதிக்கும் அபேட்சகர்கள் அதனாலேற்படும் இடருக்குத் தாமே பொறுப்பாவர் ;

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். அபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை குறித்த காலத்திற்குள் அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டிற்கு மிக அருகிலுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு அனுப்பிவைக்கலாம் ;

(iv) **மருத்துவச் சோதனையும், பயணச் செலவும்**.—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கையரான உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன்பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழில் செய்பவர்களிடம் செல்லுமாறு வேண்டப்படுகின்றனர். அத்தகைய சோதனைக்காகிய கட்டணமும் இலங்கைக்குப் பயணமாவதற்குரிய செலவும் அவ்வுத்தியோகத்தர்களாலேயே கொடுக்கப்படல் வேண்டும்.

2. (i) **நியமன நியதிகளும், சேவை நிபந்தனைகளும்**.—இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் உபகாரச் சம்பள நிதிக்கு உதவுத்தொகை செலுத்தப்படல் வேண்டும் ;

(ii) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் சொந்த மருத்துவச் சேவையில் ஈடுபடும் உரித்துடையராகார் ;

(iii) சேவையில் உறுதிப்படுத்தப்படுமுன்னர் தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர், நிதிப் பிரமாணங்கள், நிருவாகப் பிரமாண அரசாங்க சேவை ஆணைக்குழு நியதிகள், வைத்தியசாலை நிருவாகம் தொடர்பான, பிரமாணங்கள், சிங்களம்/தமிழ் ஆகியவற்றில் திணைக்களப் பரீட்சையொன்றில் சித்திபெறல் வேண்டும். ஆயுள்வேத திணைக்கள மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான (பொதுத்தரம்) பரீட்சையும் இதுவே.

இப்பரீட்சையில் சித்திபெறத் தவறுமிடத்து 120, 121 ஆம் நிருவாகப் பிரமாணங்கள் ஏற்புடையனவாகும்.

3. **சம்பளமும், படிகளும்**.—இப்பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு : ரூபா 9,600—4 × 360 ரூபாவும் 7 × 480—14,400 ரூபாவும். 11,520 ரூபாவுக்கு முன்னர் வினைத்திறமைகாண் தடையுண்டு. 11,520 ரூபாவுக்கு முன்னரமையும் வினைத்திறமைகாண் தடை, வேலை நடத்தை ஆகியவைபற்றிய திணைக்களத் தலைவரிடமிருந்து பெற்ற அத்தாட்சிப் பத்திரமொன்றை உள்ளடக்குவதாக அமையும்.

4. **தேவைப்படும் தகைமைகள்**.—ஒவ்வொரு அபேட்சகரும், தான் :

(அ) சிறந்த நன்நடத்தையும், தேகாரோக்கியமும் உடையவரென்றும்

(ஆ) 16.10.1970 இல் 33 வயதுக்குக் குறையாதவரென்றும் 45 வயதுக்குக் கூடியவரல்ல என்றும் ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஆயுள்வேதக் கல்லூரியொன்றின் டிப்ளோமா வுடையவரென்றும் ;

(ஈ) அரசாங்க ஆயுள்வேத வைத்திய நிலையமொன்றில் வைத்தியராக 10 வருட அனுபவமுடையவரென்றும், அல்லது பொது ஆயுள்வேதத் தொழிலராக 15 வருட அனுபவமுடையவரென்றும் ;

(உ) ஆயுள்வேதத்தில் பட்டத்திற்குப்பின் பெறும் தகைமையுடையவர் அல்லது ஆயுள்வேதத்தில் ஆரம்ப ஆராய்ச்சி செய்து புகழ் பெற்றவர் அல்லது ஆயுள்வேதத்தில் பல வெளியீடுகள் செய்து சிறப்புப் பெற்றவர் என்றும்.

**குறிப்பு**.—நிருவாக அனுபவமுடைமை கூடுதலான தகைமையளிக்கும் திருப்திகரமான சான்றளித்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் கேட்கப்படும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு.—சமயதீட்சை சான்றிதழ் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது) ;

(ஆ) மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) குணச்சான்றிதழ்கள் இரண்டு. இவ்வறிலொன்று பாடபணிப்பாளர், கல்லூரி ஆசிரியர், அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் ;

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்திபெற்ற மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ் ;

**குறிப்பு**.—(i) சாதனங்கள் அல்லது சாதனங்களின் பிரதிகள் எவற்றையும் விண்ணப்பத்துடன் இணைத்தல் கூடாது,

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும், அவர்கள் தாங்கள் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அவ்வறிவித்தல் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் (" ஆ " எனக் குறிப்பிடப்பட்ட) அஞ்சலட்டையை இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறு தொடர்புகளும் செயலாளர், அரசாங்கசேவை ஆணைக்குழு என முகவரியிடப்பட்டு அனுப்பப்பட வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தர்களுக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பக்கூடாது.

8. இந்த வர்த்தமானியின் ஆரம்பத்தில் I ஆம் பகுதி, II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்கசேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு வேண்டப்படுகின்றனர்.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சலட்டையை (" அ " எனக் குறிப்பிடப்பட்ட) அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பி திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்களின் விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கமைய ஒழுகுபவர் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் தமது விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை ஏதும் உடையராகார்.

எஸ். பி. நாணயக்காரா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலகம்,
த. பெ. இலக்கம் 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 25 ந உ.

10–183/8—2.10.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,926.

---

## சௌக்கியத்திணைக்களம்

### தொழிலாலெழும் நோய்ச்சிகிச்சையாளர் பதவி

சௌக்கியத் திணைக்களத்தில் தொழிலாலெழும் நோய்ச்சிகிச்சையாளர் (ஒக்குப்பேஷனல் தெறபிஸ்ற்) களாக நியமிப்பதற்கு (ஆண்களும், பெண்களுமான) தகைமைபெற்ற தொழிலாலெழும் நோய்ச்சிகிச்சையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதன்கீழ் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவம் போன்ற படிவத்தில் விண்ணப்பங்களை நிரப்பி அவற்றை 23.10.1970 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன் எனக்குக் கிடைக்கும்படி அனுப்புதல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத்திட்டம் ஆண்டொன்றுக்கு ரூபா 3,864—18 × 144—ரூபா 6,456. இதில் ஆண்டொன்றுக்கு ரூபா 5,064 ஐப் பெறுமுன்பு வினைத்திறமைகாண் தடையொன்றுண்டு.

3. *தேவையான தகைமைகள்*—ஒவ்வொரு ஆண்/பெண் விண்ணப்பக்காரரும், தான்—

(அ) 23.10.1970 ஆந் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவரென்றும், 40 வயதுக்கு மேற்படாதவரென்றும்,

(ஆ) சிறந்த குணவியல்பும், உடல்நலமும் உள்ளவரென்றும்,

(இ) தொழிலாலெழும் நோய்ச்சிகிச்சையில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிலையமொன்றின் தகுதித் தேர்வுப் பத்திரம் (டிப்ளோமா) பெற்றுள்ளவரென்றும்

திருப்திகரமான சான்றுகளைச் சமர்ப்பிக்கவேண்டும்.

4. *நியமன நியதிகள்.*—

(i) நியமனம் பெறும் ஆண்களின் விடயத்தில் பதவிகள் நிரந்தரமானவையும், இளைப்பாற்றிச் சம்பளத் தகுதி உள்ளனவுமாகும். அத்துடன் விதவை, அநாதர் இளைப்பாற்றிச் சம்பளத் திட்டத்துக்கு உதவுதொகையும் செலுத்தப்படும். நியமனம் பெறும் பெண்களின் விடயத்தில் அரசாங்க சேவைச் சகாயநிதிக்கு உதவுதொகை செலுத்தப்படும். அவர்கள் 29.4.57 ஆந் திகதிய 372 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை நியதிகளின்படி இளைப்பாற்றிச் சம்பள அந்தஸ்து அளிக்கப்படத் தகுதியுள்ளவர்களாவர்.

(ii) தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் குறுகிய முன்னறிவித்தலில் கடமைகளை ஏற்கும்படி கேட்கப்படுவர்.

5. விண்ணப்பக்காரர் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப்பிரதிகளை அல்ல) தமது விண்ணப்பங்களுடன் இணைத்தனுப்புதல் வேண்டும்.—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (*கவனிக்க.*—ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(ஆ) தொழிலாலெழும் நோய்ச் சிகிச்சையில் பெற்ற (டிப்ளோமா) தகுதித் தேர்வுப் பத்திரத்தின் சான்றிதழ்.

(இ) விண்ணப்பக்காரரின் தகைமைகள், குணவியல்பு, இப்பதவிக்கு நியமிக்கப்படுதற்கான தகுதி என்பவற்றுக்கு அண்மையில் பெற்ற மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள் (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ள அபேட்சகர்கள் இந்த உப-பிரிவின் பிரகாரம் நற்சாட்சிப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க வேண்டியதில்லை).

6. விண்ணப்பங்களும், அவை சம்பந்தமான வேறேதாவது கடிதத் தொடர்புகளும் சௌக்கியசேவை அதிபதி, தபாற்பெட்டி 500, கொழும்பு என்று விலாசமிட்டு அனுப்பப்பட வேண்டுமேயொழிய இத்திணைக்களத்தில் உள்ள எந்த உத்தியோகத்தரதும் சொந்தப் பெயர் விலாசத்துக்கு அனுப்பப்படக்கூடாது.

7. இந்த வர்த்தமானப் பத்திரிகையின் (கசெற்றின் பகுதி 1, தொகுதி 11 இன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சீ. எஸ். எச். பி. ஜயசூரியா,
பதில் சௌக்கியசேவை அதிபதி.

சௌக்கியசேவை *அதிபதி அலுவலகம்,*
கொழும்பு 1.
*2.10.1970.*

### குறிப்பிட்ட மாதிரி விண்ணப்பப் படிவம்

#### தொழிலாலெழும் நோய்ச்சிகிச்சையாளர் பதவிக்கான விண்ணப்பம்

1. (அ) முழுப்பெயர் :————.
   (ஆ) தபால் விலாசம் :————.
2. (அ) 23. 10. 1970 ஆம் திகதியன்று சரியான வயது.
   வருடங்கள் :————. மாதங்கள் :————. நாட்கள் :————.
   (ஆ) பிறந்த திகதியும், இடமும் :————.
   (பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்பட வேண்டும்)
3. தேசிய இனம் :————.
4. விவாகமானவரா, தனித்தவரா அல்லது தாரமிழந்தவரா ? :————.
5. பிள்ளைகள் இருந்தால் அவர்களின் எண்ணிக்கையும், வயதுகளும் :————.
6. தொழிலாலெழும் நோய்ச்சிகிச்சையில் தகுதித் தேர்வுப் பத்திரம் (டிப்ளோமா) பெற்றுள்ளீரா ? :————.
7. பாடசாலையை விட்டு விலகிய காலந்தொட்டு பார்த்த தொழில்கள் :————.
8. ஏதாவது விசேட கோரிக்கைகள், தகைமைகள் அல்லது அனுபவங்கள் என்பவற்றின் விவரங்கள் :————.
9. சமர்ப்பித்துள்ள நற்சாட்சிப் பத்திரங்களைத் தந்த (சொந்தக்காரர் அல்லாத நபர்களின் பெயர்களும், பதவிப் பெயர்களும் :————.
10. வேறேதாவது விவரங்கள் :————.

திகதி :————. கையொப்பம்.

*10-39—2. 10. 70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926*

## கல்வி அமைச்சு

### புற போதனாசிரியர் பதவிகள்—கனிட்ட தொழில் நுட்ப கல்வி நிலையம், அனுராதபுரம் 1970–71

கல்வி அமைச்சின் கீழ் உள்ள அனுராதபுரம் கனிட்ட தொழில் நுட்ப கல்வி நிலையத்துக்கான புற போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 1970 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 22 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனுராதபுரத் தொழில் நுட்பக் கல்வி நிலைய அதிபருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். கல்வி, தொழில் நுட்பம், தொழிலியல் பற்றிய தகைமைகள், இவற்றில் அவர்தம் அனுபவம் சம்பந்தமான சகல விபரங்களையும் அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களில் குறிப்பிடல் வேண்டும். ஒவ்வொரு பாடத்திற்கும் வெவ்வேறான விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

2. எப்பாடங்களில் புற போதனாசிரியர்களுக்கான காலியிடங்கள் உள்ளனவெனக் கீழே காட்டப்பட்டுள்ளது. எல்லாப் பாடங்களிலும் வகுப்புகள் சிங்கள மொழியிலேயே நடாத்தப்படும்.

(1) சிங்கள மொழி
(2) ஆங்கில மொழி
(3) காய்ச்சி இணைத்தல்
(4) தச்சுவேலை வரைதல்
(5) குழாயமைப்பு, தொழில் நுட்பவியல், பயிற்சி
(6) மின்கம்பி இணைத்தற் தொழில் நுட்பவியலும் பயிற்சியும்
(7) வானொலி பழுதுபார்த்தற் தொழில் நுட்பவியலும் பயிற்சியும்
(8) ஆரம்ப விஞ்ஞானம்
(9) கேத்திரகணித வடிவ, பொறிமுறை வரைதல்
(10) கணிதம்
(11) வெப்பவியல், ஒளியியல், ஒலியியல்
(12) மின்னியலும், காந்தவியலும்
(13) மேசன் வேலை

3. புற போதனாசிரியர்களுக்கான கட்டணங்கள் அவர்களின் தகைமைகள், அனுபவம், அவர்கள் படிப்பிக்கும் வகுப்புகள் ஆகியவற்றிற்கு அமைய மணித்தியாலத்திற்கு ரூபா 2/50 தொடக்கம் ரூபா 15/– வரை வேறுபடும்.

4. நியமனம் இவ்வருடம் ஒக்ரோபர் மாதம் தொடக்கம் அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதம் வரையிலுள்ள காலத்திற்கானதாகும். தேவையைப் பொறுத்து இடைக்காலத்திலும் சேவை நிறுத்தப்படலாம்.

5. வகுப்புகள் மு. ப. 8.30 மணி தொடக்கம் பி. ப. 4.30 மணி வரையும், பி. ப. 5 மணி தொடக்கம் பி. ப. 7.15 மணி வரையும் நடாத்தப்படும். மேற்குறித்த நேரங்களில் படிப்பிக்கச் சம்மதிப்பவர்களின் விண்ணப்பங்கள் மாத்திரமே சீர்தூக்கிப் பார்க்கப்படும். அபேட்சகர்கள் தமக்குப் படிப்பிக்க வசதியாக உள்ள நேரத்தை விண்ணப்பத்தில் விளக்கமாகக் குறிப்பிடல் வேண்டும்.

6. உள்ளகப் பரீட்சகர்கள் அல்லாத வேறு பரீட்சகர்கள் அமர்த்தப் படாத வருடாந்த இடைமானிப் பரீட்சைகளிலும் இறுதிப் பரீட்சைகளிலும் புற போதனாசிரியர்கள் தங்கள் வகுப்புகளில் உள்ள மாணவர்களை மேலதிக வேதனமின்றிப் பரீட்சித்தல் வேண்டும்.

7. அரசினர் சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் பகுதித் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்கு முன் அதிபரால் பெற்றுக்கொள்ளப்படாத இவ்விண்ணப்பங்கள், விண்ணப்பம் உரிய திகதிக்கு முன் பகுதித் தலைவரால் பெற்றுக்கொள்ளப்பட்டது என்றும் தாமதத்துக்குத் தகுந்த காரணம் காட்டப்பட்டாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

8. எப்பாடத் தொடர்பில் விண்ணப்பம் செய்யப்படுகிறதென விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுதல் மிகவும் முக்கியமெனக் கவனிக்கவும்.

டபிள்யூ. டீ. பர்னாந்து,
கல்வி அதிபதி, வடமத்திய மாநிலம்,
அனுராதபுரம்.

கல்வித் திணைக்களம்,
அனுராதபுரம்,
1970 ம் ௵ செத்தெம்பர் மீ 17 ந உ.

10–14—2.10.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,926

---

இல. வெ. மு/3/114.

## கல்வி அமைச்சு

### யூகோசிலேவியாவில் செல்லுபடியான பட்டப்பின் புலமைப் பரிசில்கள்—1971 ஆம் ஆண்டு

பின்வரும் துறைகளில் தொழில்நுட்பப் படிப்புகளுக்கென யூகோசிலேவிய சமூகவுடமைச் சமஷ்டிக் குடியரசில் செல்லுபடியான பட்டப்பின் புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

எந்திரவியல்

கட்டடக் கலை

தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து கொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

குறிப்பு 1.—புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந் திகதிய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு 2.—சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

குறிப்பு 3.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. கால எல்லை.—இப்புலமைப் பரிசில்கள் சாதாரணமாக இரண்டு வருட கால அளவினதாகும்.

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றிக் கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்று காரணங்களையிட்டு யூகோசிலேவிய அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்பப் புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. தகவுந்திறன்.—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் :—

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 15.10.1970 அன்று 25 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

(iii) ஆங்கிலத்தில் உயர்ந்த தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(iv) விரும்பும் கற்கை நெறிக்குப் பொருத்தமுடைய பாடங்களில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் பட்டம் அல்லது பிரித்தானிய கட்டடக் கலைஞர் வேந்தியல் நிலையத்தின் (R. I. B. A.) இடைமானித் தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு 1.—அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்குச் சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 15.10.1970 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

குறிப்பு 2.—தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்குச் சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (எ) ம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. **அளிப்பு நிபந்தனைகள்.**—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(i) இடவசதி, உணவுச் செலவு, ஏனைய சொந்தச் செலவுகள் ஆகிய வற்றின் பொருட்டு மாதாந்தம் ஓர் உதவிப்படி.

(ii) அங்கு போய்ச் சேர்ந்ததும் உடைகளுக்கான ஒரு சகாயப்படி.

(iii) ஒவ்வொரு புதிய கழகவாண்டுக்கும் புத்தகங்களுக்கான ஒரு சகாயப்படி.

(iv) பாடத்திட்டத்திற்கமையத் தகுதித் தேர்வுப் பரீட்சை ஒன்று எதிர்பார்க்கப்படின், அத்தகைய பரீட்சைக்கு ஆயத்தம் செய்தற் பொருட்டு ஒரு சகாயப்படி.

(v) பாடத்திட்டத்தின் கீழ் விடுமுறை காலம் செய்முறை வேலை எதிர்பார்க்கப்படின், அத்தகைய வேலைகள் தொடர்பான செலவு களை மீளக்கொடுத்தல்.

(vi) யூகோசிலேவிய பிரசைகளுக்கு அமையும் நிபந்தனைகளுக்கமைய உடனலப் பாதுகாப்பு.

(vii) படிப்புகளில் காணப்படும் தேர்ச்சிக்கமைய உதவிப்படி ஒவ்வொரு கழகவாண்டு முடிபிலும், தீர்மானிக்கப்படும் ஒரு தொகையால், அதிகரிக்கப்படும் அல்லது குறைக்கப்படும்.

குறிப்பு.—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக் கும் அமையும்.

5. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவுசெய்யப்படும் அபேட்சகர்கள், யூகோ சிலேவியாவிற்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங் கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசு வாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றித் திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறி யைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்துப் புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத் துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரை யில் சம்பளங்கள், சகாயப் படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்தியப் பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் யூகோ சிலேவியாவில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்வதற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா எனப் பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்தியப் பரீட்சையில் தேற வேண்டும்.

8. **உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார்.**

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவ ராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப் படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நிய மனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமை யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத் தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1970 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகக் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூபா 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக் கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி அமைச்சி லுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப் படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள் ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

பி. உடகம,
நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1970 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 25 ந் உ.

10–154—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926

---

இல. வெ. மு/4/107

## கல்வி அமைச்சு

### கனேடாவில் செல்லுபடியான பொதுநலவரசுப் புலமைப் பரிசில்கள்—1971 ஆம் ஆண்டு

பொதுநலவரசுப் புலமைப் பரிசில், இணையுரிமைப் பரிசில் திட்டத்தின் கீழ் கனேடா அரசாங்கத்தால் வழங்கப்படுவதும் கனேடா பல்கலைக் கழகங்களில் 1971 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இடையில் ஆரம்பிக் கும் கழகவாண்டு தொடக்கம் செல்லுபடியாவதுமான புலமைப் பரிசில் களை வழங்குதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பட்டப்பின் படிப்பில் அல்லது ஆராய்ச்சி வேலைகளில் உயர்தர திட்டங் களைப் பின்பற்றுதற்கு இலங்கை மாணவர்களுக்கு வாய்ப்புகள் அளித் தலே இப்புலமைப் பரிசில்களின் நோக்கமாகும்,

கற்கைத் துறைகள் வரையறுக்கப்பட்டில்லை ; எனினும், ஏற்கனவே கலாநிதிப் பட்டம் பெற்றுள்ள அபேட்சகர்களுக்கேனும், மருத்துவ பட்டங்களுக்கு பல் மருத்துவப் பட்டங்களுக்கு அல்லது பிணியாய் நிலையப் பயிற்சிக்கேனும் இப்புலமைப் பரிசில்கள் வழங்கப்படமாட்டா தெனக் கவனிக்கவும்.

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக் கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்க ளுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 1.—புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந் திகதிய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப் படுத்தி அச்சுற்று நிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**குறிப்பு 2.**—சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

**குறிப்பு 3.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. **கால எல்லை.**—புலமைப் பரிசில்கள் சாதாரணமாக இரண்டு கழக ஆண்டுகளையும் இடைப்பட்ட கோடைக்காலத்தையும் கொண்ட கால அளவினதாகும் ; எனினும், அளிப்பு வழங்கப்படும் நெறியைப் பூர்த்தி செய்தற்குக் குறைந்த காலம் தேவைப்படின் புலமைப் பரிசில் குறைந்த கால அளவினதாகும். புலமைப் பரிசில் பெறுபவரின் படிப்புத் திட்டத்துக்குத் தேவைப்படின் அவருடைய தேர்ச்சி நன்றுயிருப்பின் மேலதிக காலத்துக்கு அளிப்பு நீடிக்கப்படும்.

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்று காரணங்களையிட்டு கனேடா அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில, புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. **தகவுத்திறன்.**—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும் ;

(ii) 1.10.1971 அன்று 35 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும் ;

(iii) விரும்பும் கற்கை நெறிக்கு அமைவதும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படுவதுமான இரண்டாம் வகுப்பு (உயர்பிரிவுப்) பட்டம் குறைந்தபட்சம் பெற்றிருக்க வேண்டும். (பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்பவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா) ;

(iv) ஆங்கிலத்தில சிறந்த தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(மேலுள்ள 3 (iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் கட்டாயமானவையாகும். சமமான அல்லது உயர்ந்த தகைமைகளைப் பெற்றிருப்பவர்களும் இத்தகைமைகளைக் கட்டாயமாகப் பெற்றிருக்க வேண்டும்)

**குறிப்பு 1.**—அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடப்பாடுகளை 1.10.1971 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

**குறிப்பு 2.**—தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும், நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. **அளிப்பு நிபந்தனைகள்.**—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும்—

(அ) கனேடாவுக்கு போய் திரும்பிவரும் பிரயாணச் செலவு ; சாதாரணமாக, பல்கலைக் கழகச் சங்கத்தினாலும் கனேடா கல்லூரியாலும் ஒழுங்கு செய்யப்படும் விமான மூல சிக்கன வகுப்புப் பிரயாணம் ;

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட கற்கைக் கட்டணமும் பல்கலைக் கழக ஏனைய கட்டணங்களும் (உணவு, இருப்பிடச் செலவு நீங்கலாக) ;

(இ) சொந்தத் தாபரிப்புச் சகாயப்படியாக மாதாந்தம் $ 210.00 வீதம்

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ, வைத்தியசாலைச் செலவுகள் ;

(உ) படிக்கும் வருடம் ஒவ்வொன்றுக்கு $ 120.00 வீதம் புத்தகங்களுக்கான சகாயப்படி ;

(ஊ) விசேட சந்தர்ப்பங்களில், பல்கலைக் கழகத்தில் பெற்றுக் கொள்ள முடியாது விசேட புத்தகங்கள், உபகரண, வேறும் பொருட்கள் ஆகியவற்றிற்கான சகாயப்படி ;

(எ) கற்கும் முதல் வருடம் $ 240.00 உம் அடுத்த வருடங்கள் மாதமொன்றுக்கு $ 10.00 வீதமும் உடைகளுக்கான ஒரு சகாயப்படி ;

(ஏ) விசேட சந்தர்ப்பங்களில், மாணவரின் கல்வித் திட்டத்துக்கு அவசியமெனின் கனேடாவுக்குள் பிரயாணம் செய்தற்கு மொத்தம் $ 600.00 வரை பிரயாணச் செலவு ;

(ஐ) புலமைப் பரிசில் பெறுபவர்கள் கனேடாவுக்குச் செல்லுமுன் விவாகஞ் செய்திருப்பின் அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளுக்கு ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள அறிவித்தலைப் (பந்தி 4(I)) பார்க்கவும் ;

(ஒ) இக்கொடுப்பனவுகள் மீது கனேடாவில் வரி விதிக்கப்படமாட்டாது.

**குறிப்பு.**—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள் பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், கனேடவுக்கு செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரையில் சம்பளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்தியப் பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் கனேடாவில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடலநலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேற வேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார்.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழக்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1970 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 16 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூ. 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூ. 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி, அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அது பற்றி உடனே அறிவிக்கவேண்டும். அங்ஙனம் செய்யத்தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 23 ந உ.

10–188—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926

---

## அக்கரைப்பத்து கிராம சபை பகுதிக்கு திடீர் மரண விசாரணை அதிகாரிக்கான பதவி

புத்தளம் மாவட்டத்தில் கல்பிட்டி காரியாதிகாரியின் பிரிவில் அக்கரைப்பற்று கிராம சபை பகுதிக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி பதவிக்கு விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன. கீழ் உள்ள மாதிரிப் படிவத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 23.10.70 ல் அல்லது அதற்கு முன்னர் எனக்குக் கிடைத்தல் வேண்டும்.

ஆட்சியெல்லையின் பகுதி

கிராம சேவர் பிரிவுகள் :

(1) கட்டைக்காடு (597)

(2) கொத்தான்தீவு (598)

(3) கடையாமொட்டை (599)

(4) விருதோடை (601)

(5) தேதாப்பளை (603)

(6) நாவற்காடு (605)

2. இப்பதவிக்கு குறிக்கப்பட்ட சம்பளம் கொடுபடமாட்டாது. ஒவ்வொரு விசாரணைக்கும் ரூ. 7.50 கொடுபடும்.

3. தேவையான தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்வரும் தகைமைகள் உடையவரென திருப்திகரமாக நிரூபித்தல் வேண்டும்.

(அ) 23.10.70 ல் வயது 30 க்குக் குறையாதவராகவும் 60 க்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) நற்குண முடையவராகவும் உடல் நலம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) இப்பகுதியில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) பின்வருவனவற்றில் ஒரு பரீட்சையில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.

(i) 1925 ம் ஆண்டு தொடக்கம் 1944 ஆண்டு வரைக்கும் நடைபெற்ற சுயபாஷைப் பாடசாலை விடுகைத் தராதரப் பத்திரம் அல்லது சிங்களம் அல்லது தமிழை ஒரு பாடமாகக் கொண்ட ஆங்கில பாடசாலை விடுகைத் தராதரப் பத்திரம் அல்லது சிங்களம்/தமிழ் ஒரு பாடமாகவுள்ள சிங்களம்/தமிழ்/ஆங்கில கனிஷ்ட தராதரப் பத்திரம்.

(ii) இதே போன்ற ஒரு பரீட்சை அல்லது உயர்வான பரீட்சை.

4. அபேட்சகர்கள் விண்ணப்பங்களுடன் பின்வரும் பத்திரங்களின் பிரதிகளை அனுப்புதல் வேண்டும்.—

(அ) பிறப்புப் பதிவுப் பத்திரம்.

(ஆ) ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) விண்ணப்பதாரரின் நற்குணத்தை அத்தாட்சிப்படுத்தக் கூடிய இரண்டு சமீபத்திய நற்சாட்சிப் பத்திரங்கள். இவற்றில் ஒன்று கிராம சேவகரால் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரரின் நிரந்தர வசிப்பிடம் பற்றிய கிராம சேவகரின் அத்தாட்சிப் பத்திரம்.

5. அரசாங்க ஊழியர்கள் கூட்டுத்தாபனத் தொழிலாளர்கள் உள்ளூராட்சிச் சபைகளின் அங்கத்தவர்கள் ஆகியோர் திடீர் மரண விசாரணை அதிகாரிகளாக நியமனம் பெறத் தகுதியற்றவர்களாவர்.

6. விண்ணப்பம் கிடைத்ததுபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

பி. ஜி. புஞ்சிஹேவா,
அரசாங்க அதிபர், புத்தளம்.

கச்சேரி,
புத்தளம், 23.9.1970.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

திடீர் மரண விசாரணை அதிகாரி பதவி ..........................

1. விண்ணப்பதாரரின் பெயரும் முழு விலாசமும் (பெரிய எழுத்தில்) :————.

2. நிரந்தர வசிப்பிடமும் வசித்த காலமும் :————.

3. ............ல் சரியான வயது. வருடங்கள்———— மாதங்கள் ————. நாட்கள்————.
பிறந்த திகதியும் பிறப்பிடமும் :————.

4. விவாகமானவரா விவாகமாகாதவரா ? ————.

5. கல்வித் தகைமைகள் :————.

6. தற்போதைய தொழில் :————.

7. பொருளாதாரத் தட்டுப்பாடு ஏற்பட்டதுண்டா ? அவ்வாறு விபரங்கள் தருக :————.

8. விண்ணப்பதாரரின் சொத்துக்களின் அளவுகளும் பெறுமதியும் :————

9. விண்ணப்பதாரர் நீதிமன்றத்தில் ஏதாவது குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டவரா ? ஆமெனில் விபரங்கள் தருக.

10. இப்பதவிக்கான வேறு ஏதாவது விசேட தகைமைகளின் விபரங்கள் :————.

இந்த விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான் இத்தால் அத்தாட்சிப் படுத்துகின்றேன். இதில் கொடுக்கப்பட்ட ஏதாவது விபரங்கள் பிழையானவையாகவோ அல்லது உண்மையற்றனவையாகவோ காணப்பட்டால், தெரிவுக்கு முன்னர் இத்தவறு கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பிக்கத் தகுதியற்றவராகக் கருதப்படுவேன் என்பதையும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் நஷ்ட ஈடின்றி வேலை நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————.
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

10.91—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926

## கல்வி அமைச்சு

### மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ்* அரசினர் பாடசாலைகளில் உதவி ஆசிரியர்களின் ஆட்சேர்ப்பு

சிங்கள/தமிழ்/ஆங்கில ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது ஆங்கில உதவி ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி எய்தியவர்களிடமிருந்து உதவி ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சேவையிலுள்ள மாணவ ஆசிரியர்கள் இவ்வறிவித்தலுக்கமைய விண்ணப்பிக்கலாகாது.

2. தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களுள்ள மாவட்டங்கள் கீழே கொடுபட்டுள்ளன :

| | | | |
|---|---|---|---|
| 1. | பொலன்னறுவை | 10. | சிலாபம் |
| 2. | அனுராதபுரம் | 11. | யாழ்ப்பாணம் |
| 3. | நுவரெலியா | 12. | மட்டக்களப்பு |
| 4. | அம்பாறை | 13. | மாத்தளை |
| 5. | திருக்கோணமலை | 14. | புத்தளம் |
| 6. | பண்டாரவளை | 15. | காலி (ஹினிதும) |
| 7. | மொனறாகலை | 16. | இரத்தினபுரி |
| 8. | குருநாகல் | 17. | வவுனியா |
| 9. | அம்பாந்தோட்டை | 18. | மன்னார். |

வெற்றிடங்கள் மேலுள்ளவாறு விதிக்கப்பட்டிருப்பினும், தமிழ்ப் பிள்ளைகள் கூடுதலாகவுள்ள பகுதிகளில் சிங்கள மொழி மூல ஆசிரியர்களுக்கும் சிங்களப் பிள்ளைகள் கூடுதலாகவுள்ள பகுதிகளில் தமிழ் மொழி மூல ஆசிரியர்களுக்கும் சிறு தொகை வெற்றிடங்களுண்டு. பாடசாலைகளின் குறிப்பான தேவைகளுக்கமைய இவ்வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

3. நியமனத்துக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணபதாரி, அவர் நியமிக்கப்படும் மாவட்டத்தில் சேவை புரிவதாகவும் எச்சந்தர்ப்பத்திலும் மாற்றத்துக்கான விண்ணப்பம் ஒன்றும் செய்ய மாட்டாரெனவும் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும்.

4. கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் 1970 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடது பக்க மேல்மூலையில் " சிங்கள/தமிழ்/ஆங்கில ஆசிரியர் தராதரப்பத்திரம், உதவி ஆசிரியர் பதவிகள் " என அடையாளமிடப்பட வேண்டும்.

5. **தகவுத்திறன்.**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவராகத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :

(i) 25.10.1970 அன்று 18 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (இவ்வயதுக்கட்டுப்பாட்டின் மேலெல்லை ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு அமையாது) ;

(ii) சிங்கள/தமிழ்/ஆங்கில ஆசிரியர் தராதரப் பத்திரம் அல்லது ஆங்கில உதவி ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும் ;

(iii) சிறந்த நல்லொழுக்கம் உடையவராய் இருக்க வேண்டும் ;

6. **விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை இணைத்தனுப்ப வேண்டும் :**

(அ) பிறப்புப் பதிவுச் சாட்சிப் பத்திரம் (மு. கு. ஞானஸ்நானப்பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் ஒழுங்குச் சட்டங்களின் நோக்கங்களின் பொருட்டு வழங்கப்படும் பிறப்புச் சாட்சிப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) ;

(ஆ) பெற்றுள்ள ஆசிரியர் தராதரப் பத்திரம் ;

(இ) உரிய பகுதிக் காரியாதிகாரியிடமிருந்து பெறப்படுவது ஒன்று உட்பட இரு நற்சாட்சிப்பத்திரங்கள் .

7. **சம்பளமும் சகாயப்படிகளும்.**—

(i) சிங்கள/தமிழ் ஆசிரியர் தராதரப்பத்திரம் பெற்றவர்களுக்கு : அனுமானச் சம்பளம் ரூபா 768—2 × 30—828 வருடாந்தம் ; ஒன்று திரட்டிய சம்பளம் ரூபா 2,640—2 × 54—2,748 ;

(ii) ஆங்கில ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்றவர்களுக்கு: அனுமானச் சம்பளம் ரூபா 1,056—2 × 72—1,200 வருடாந்தம்; ஒன்று திரட்டியசம்பளம் ரூபா 3,090—4 × 90—3,456 வருடாந்தம் ;

(iii) ஆங்கில உதவி ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்றவர்களுக்கு : அனுமானச் சம்பளம் :

ரூபா 768—2 × 30/5 × 36/12 × 42—1,512

ரூபா 864 ரூபா 1,050 ஆகிய சம்பளங்களைப் பெறமுன் வினைத் திறமைகாண் தடைகள்.

ஒன்று திரட்டிய சம்பளம் ரூபா 2,640—19 × 60—3,780

விவாகச் சகாயப்படி விதிக்கப்பட்டுள்ள வீதங்களின் பிரகாரம் வழங்கப்படும்.

8. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் உபகாரச்சம்பள உரித்துடையனவையுமாகும் ;

(ii) ஆண் நியமதாரிகள் விதவைகள், அனாதைகள் உபகாரச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்த வேண்டும் ;

(iii) நியமதாரி, ஏற்கனவே அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமான உபகாரச் சம்பள உரித்துடைய சேவையில் இல்லாவிடின் 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவார் ;

ஏற்கனவே அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமான, உபகாரச் சம்பள உரித்துடைய சேவையில் உள்ளவர்கள் நியமிக்கப்படுமிடத்து, இப்பதவியில் ஒரு வருட காலத்துக்குப் பதில் கடமை புரிய வேண்டும் :

(iv) தெரிவு செய்யப்படும் நியமதாரி இத்தீவின் எப்பகுதியிலும் கடமை புரியுமாறு வேண்டப்படுவார். அவர் அதற்கான உடல் நலன் உடையவராய் இருக்கவும் வேண்டும் ;

(v) தெரிவு செய்யப்படும் நியமதாரி அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைக் காரியப்படுத்துதற்கு, குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரச கரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்தற் பொருட்டு ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ள அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடியதான விதிகளுக்கு அமைய வேண்டும்.

9. அரசாங்க சேவையிலுள்ளவர்களின் விண்ணப்பங்கள் அவர்கள் கடமை புரியும் திணைக்களத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

10. விண்ணப்பங்களும் அவை தொடர்பான ஏனைய கடிதங்களும், நிரந்தரக்காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். இவ்வமைச்சின் எவ்வுத்தியோகத்தரின் பெயருக்கும் அவை அனுப்பப்படலாகாது.

11. இவ்வர்த்தமானியின் I ஆம் பகுதி II ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அரசினர் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமையும் பொது நிபந்தனைகளுக்குக் கவனம் கோரப்படுகின்றது.

12. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் தேதியின் பின்னர் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அஞ்சலில் ஏற்படக்கூடிய காலதாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளுமுகமாக விண்ணப்பங்களை நேரகாலத்துடன் அனுப்புமாறு விண்ணப்பதாரிகளுக்கு ஆலோசனை கூறப்படுகிறது.

பி. உடகம,
நிரந்தரக் காரியதரிசியும்
மகா வித்தியாதிபதியும்.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,

1970 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 21 ந் வ.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

**உதவி ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் : ————.
(சொந்தப் பெயர் முதல்)

2. விலாசம் : ————.

3. பால் : ————.

4. விவாகம் செய்தவரா/செய்யாதவரா : ————.
(விவாகம் செய்தவராயின் வாழ்க்கைத்துணைவர்/துணைவி அரசாங்க ஊழியரா ? அங்ஙனமாயின் விபரங்கள் கொடுக்கவும்)

5. பிறந்த திகதியும் இடமும் : ————.

6. 25.10.70 அன்றுள்ளபடி வயது : ————.

7. பின்வருவோர் பிறந்த இடம் : ————.
(அ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
(ஆ) விண்ணப்பதாரியின் தாய் : ————.

8. (அ) சாதியம் : ————.
(ஆ) வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா இலங்கையர் : ————.

9. கல்வித் தகைமைகள் : ————.

10. சிங்களத்தில்/தமிழில் பெற்றுள்ள தகைமைகள் : ————.

* மாவட்ட சேவைத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்படும் ஆசிரியர்கள் தமது சேவைக்காலம் முழுவதும் அவர்கள் நியமிக்கப்படும் மாவட்டத்திலேயே சேவை புரிய வேண்டும்.

11. உயர் தொழில் தகைமைகள் : ————.

(பெற்றுள்ள தராதரப்பத்திரம்)

(அ) தராதரப்பத்திரத்தின் இலக்கம் : ————.

(ஆ) தராதரப்பத்திரம் காரியப்படும் தேதி :————.

12. முன் உத்தியோகம் வகித்திருப்பின் : ————.

(i) ஆசிரியராக : ————.

(அ) பதிவிலக்கம் : ————.

(ஆ) சேவை விபரம் : ————.

பாடசாலையின் பெயர் :————.

தொடக்கம் :————. வரை.

வகித்த பதவி : ————.

(ii) வேறு யாதேனும் அரசாங்க உத்தியோகத்தராக வகித்த பதவி :————. தொடக்கம் :————வரை.

13. சேவை நிறுத்தப்பட்டதற்கு/சேவையிலிருந்து விலக்கப்பட்டதற்கு/சேவையிலிருந்து தாமாக விலகியதற்கு/ஆசிரியராக/அரசாங்க உத்தியோகத்தராக சேவையிலிருந்து விடுபட்டதற்கு காரணங்கள்:———— (முழு விபரங்களைக் கொடுக்கவும்)

14. தெரிவு செய்யப்படுமிடத்து, முதல் நியமனம் கோரும் ஐந்து மாவட்டங்களின் பெயர்களை, முன்னுரிமைக் கிரமப்படி குறிப்பிடவும் :

1 :————.
2 :————.
3 :————.
4 :————
5 :————.

மேலே கொடுத்துள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென உறுதி அளிக்கிறேன். மேலும், அரசாங்க சேவையிலிருந்து நான் விலக்கப்படவில்லை அல்லது அரசாங்க சேவையில் என் பதவியைக் கைவிட்டேனென என் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் நான் வம்சாவழி காரணமாக/பதிவு காரணமாக இலங்கையரெனவும் தீவின் எப்பகுதியிலும் கடமை புரிய ஆயத்தமாயிருக்கிறேன் எனவும் உறுதி அளிக்கின்றேன். இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்துக்குப் பின்னராயின் சேவையிலிருந்து விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் எனவும் அறிவேன்.

————,
திகதி : ————. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

10-140—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926.

## கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம்

### வினியோக விஸ்தரிப்பாளர் பதவிகள்

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரசைகளிடமிருந்து கோரப்படுகின்றன. கீழேயுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தில், தமது சொந்தக் கையெழுத்தில் நிரப்பப்பட்டு, ஆட்கள் தொகுதி முகாமையாளர், கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம், 21, வக்சால் வீதி, கொழும்பு 2, என்ற விலாசத்திற்குப் பதிவுத் தபாலில் அக்டோபர் மாதம் 10 ந் திகதிக்கு முன்னதாகவோ, அல்லது அன்றோ கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

2. விண்ணப்பத்தைக் கொண்டுள்ள தபால் உறையின் மேற்பக்க இடது மூலையில் " வினியோக விஸ்தரிப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்" என்று எழுதப்படல் வேண்டும்.

3. இப்பதவிக்கான திரட்டிய சம்பள விகிதம் :—
ரூபா 350 — 10 × 15, ரூபா 10 × 20—ரூபா 640/—.

4. **நியமன நியதிகள்.**—இவ் உத்தியோகஸ்தர்கள் வெளிவிவகார வேலைப் பணியாளர்களாகக் கணித்துப் போக்குவரத்துச் செலவுப்படியும் கொடுக்கப்படும். இவர்கள் இலங்கையின் எப்பகுதியிலும் சேவைபுரியத் தயாராக இருப்பதுடன், தேவைப்படும் பிரயாணங்களையெல்லாம் செய்யத் தயாராக இருத்தல் வேண்டும்.

5. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது வயது 10.10.70 ல் 21 வயதிற்குக் குறையவில்லை என்றும் 40 வயதிற்கு மேற்படவில்லை என்பதை நிரூபித்தல் வேண்டும்.

இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி 6 பாடங்களில் க. பொ. த. (சாதாரண தர)ப் பத்திரப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். சிரேஸ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையிலோ அல்லது இவற்றிற்குக் கூடிய தராதரப் பரீட்சைகளிலோ சித்தி பெற்றிருப்பதுடன், கூட்டுறவு இயக்கத்திலும் பொது சனத் தொடர்பிலும் பரந்த அனுபவம் பெற்றும் இருத்தல் வேண்டும்.

6. அபேட்சகர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வரும் பிரதிகளையும் இணைத்தல் வேண்டும்.

(அ) தமது தகைமைகளையும் குணத்தையும் உறுதிப்படுத்த, அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப்பத்திரங்கள்.

(ஆ) கல்வி தரத்தை உறுதிப்படுத்தும் பத்திரங்கள்.

(இ) பிறப்புச் சாட்சிப்பத்திரம் அல்லது பொது பதிவுகார ஆணையாளரால் வழங்கப்படும் வயது பற்றிய விசேட சான்றிதழ்.

7. **நியமன நிபந்தனைகள்.**—

(அ) ஒரு வருடத்திற்குத் திறமைகாண் காலமாக இருத்தல்.

(ஆ) இந்த ஸ்தாபனத்தின் தற்போது நடைமுறையிலுள்ளதும், இனிமேல் ஆக்கக்கூடியதுமான சட்ட விதிகளுக்கு இணங்க வேண்டும் ;

(இ) தீவின் எப்பகுதியிலும் கடமை புரிய வேண்டும் ;

(ஈ) ஊழியர் சகாயநிதிக்குச் சம்பளத்தில் 10 சதவீதம் கொடுத்தல் வேண்டும். ஸ்தாபனம் 15% வீதம் கொடுக்கும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், 1956 ஆம் ஆண்டின் 33 ம் சட்டத்தின்படி இயற்றிய அரசகருமமொழிச் சட்டத்திற்கு இணங்கி, தற்போதுள்ள சட்டவிதிகளுக்கும் இனிமேல் ஆக்கப்படும் சட்டவிதிகளுக்கும் இணங்க அரசாங்க மொழிக் கொள்கைக்கு உட்பட்டு நடக்க வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களினது தகைமைகள், அனுபவம், தற்போது பெறும் ஊதியம், ஆகியவற்றைக் கணித்துச் சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான முனையில் சம்பள நிர்ணயஞ் செய்வதுபற்றி பரிசீலிக்கப்படும்.

விண்ணப்பப் படிவங்கள் கொடுக்கப்படமாட்டா.

ஆட்கள் தொகுதி முகாமையாளர்.

கூ. மொ. ஸ்தாபனம்,
21, வக்சால் வீதி, கொழும்பு 2,
1970 ம் ௵ செப்தெம்பர் ௴ 19 ந உ.

### மாதிரி விண்ணப்பம்

### விநியோக விஸ்தரிப்பாளர் பதவிகள்

1. முழுப்பெயர் :————.
2. விலாசம் :————.
3. விண்ணப்பதாரி நிரந்தரமாக வசிக்கும் இடத்தைக் கொண்ட பாராளுமன்றத் தொகுதியின் பெயரும் நம்பரும் :————.
4. பிறந்த தினம் :————.
(அ) 10.10.70 ல் சரியான வயது :————.
5. தேசிய இனம் :————.
6. கல்வித் தகைமைகள் :————.
7. முந்திய நியமனங்கள் :————.

| அமர்த்தாளரின் பெயர் | சேவை ஆரம்ப தினம் | சேவை துண்டிக்கப்பட்ட தினம் | சேவையின் தராதரமும் சம்பளமும் |
|---|---|---|---|
| (அ) | | | |
| (ஆ) | | | |
| (இ) | | | |
| (ஈ) | | | |
| (உ) | | | |

8. விண்ணப்பதாரி பற்றி விசாரணை செய்யக்கூடிய இருவரின் பெயரும் விலாசமும் :

(அ) :————. (ஆ) :————

9. சிறப்பான தகைமைகள்/உரிமைகள் ஏதும் இருப்பின் :————.

————,
திகதி :————. கையொப்பம்.

10-128—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926

## தொழிற்றிணைக்களம்

### (தாயகம் மீள்வோர்) நலன் உத்தியோகத்தர் பதவி

இந்தியக் குடிவரவுத் தொழிலாளர் சபையின் தலைவராகிய தொழில் ஆணையாளரின்கீழ் அமைந்த (தாயகம் மீள்வோர்) நலன் உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. சம்பளம்.—குடிவரவு நிதியிலிருந்து வழங்கப்படக்கூடிய நிலையான மாதச் சம்பளம் (எல்லாமுட்பட)—ரூ. 600.

2. தகுதி : விண்ணப்பகாரர்.—

(அ) (1) சி. பா. த. ப. பரீட்சையிலோ,

(2) க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் இருமுறைக்குள் 6 பாடங்களிலோ சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) 30.9.70 ல் 35 வயதுக்குக் குறைவுபடாதவராயிருத்தல் வேண்டும்.

(இ) அரசாங்கத் திணைக்களம் ஒன்றிலோ, பிரசித்தி பெற்றதொரு வணிக நிலையத்தில் அல்லது தாபனத்திலோ குறைந்தது 10 ஆண்டுகளாவது சேவை புரிந்தவராயிருத்தல் வேண்டும்.

(ஈ) பிரயாண வசதிகள், பிரயாணத்துடன் தொடர்புபட்ட சுங்க வேலைகள், நாணயக் கட்டுப்பாடு வேலைகள் ஆகியன பற்றிய அறிவு உடையவராயிருத்தல் வேண்டும்.

3. பிற நிபந்தனைகள்.—

(அ) இப்பதவி தற்காலிகமானது. இளைப்பாற்றுச் சம்பளத்துக் குரியதாகாதது. ஒரு மாத அறிவித்தலுடன் நிறுத்தப் படத்தக்கது.

(ஆ) தெரிவு செய்யப்படுபவர், 1960 ம் ஆண்டின் கொடுத்துதவும் குடிவரவுச் சகாயநிதிச் சட்டப்படி, தமது சம்பளத்தில் பத்திலொரு பங்கான தொகையினைக் கொடுத்துதவும் குடிவரவு நிதிக்குக் கட்டிவருதல் வேண்டும்.

(இ) தெரிவு செய்யப்படுபவர், 1956 ம் ஆண்டின் 33 ம் இல. அரசகரும மொழி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அரசாங்க மொழிக்கொள்கைக்ிணங்க விதித்த அல்லது இனி விதிக்கப்படும் சட்டங்கள் விதிகளுக்கும் அமைந்து நடக்கும்படி வேண்டப்பெறுவர்.

(ஈ) தெரிவுசெய்யப்படுபவர், தலைமன்னாரில் பணிபுரியுமாறும், தலைமன்னாரிலோ மன்னாரிலோ வாழுமாறும், அல்லது இந்தியக் குடிவரவுத் தொழிலாளர் சபையின் தலைவராகிய தொழில் ஆணையாளர் தீர்மானிப்பதுபோல் வேறு இடங்களிற் பணியாற்றுமாறும், வாழுமாறும் வேண்டப் படுவர்.

(உ) அரசாங்கத் திணைக்களங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும் பணியாற்றுவோர் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத்தின்/கூட்டுத்தாபனத்தின் தலைவர் மூலமாக அனுப்புதல் வேண்டும்.

4. விண்ணப்பங்கள், 1970 ம் ஆண்டு ஒத்தோபர் மாதம் 20 ம் தேதியன்று அல்லது அதற்கு முன்னதாகத் தொழில் ஆணையாளருக்குக் கிடைக்கப்பெறத்தக்கனவாக "தொழில் ஆணையாளர், தொழிற்றிணைக்களம், தொழிற் செயலகம், நாரான்பிட்டி, கொழும்பு 5" என்று முகவரியிட்டு அனுப்பப்பெறுதல் வேண்டும்.

டபிள்யூ. எல். பி. த மெல்,
தொழில் ஆணையாளரும், இந்தியக் குடிவரவுத்
தொழிலாளர் சபைத் தலைவரும்.

தொழிற்றிணைக்களம்,
தொழிற் செயலகம்,
நாரான்பிட்டி,
கொழும்பு 5,
1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ந் தேதி.

10-107—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926

---

## கல்வி அமைச்சு

### அரசினர் பாடசாலைகளிலுள்ள கீழைத்தேய சங்கீத/நடன ஆசிரியர் பதவிகள்

அரசினர் பாடசாலைகளிலுள்ள கீழைத்தேய சங்கீத/நடன ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் படிவ முறையில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசிக்கு (பாடசாலை நிருவாகக் கிளைக்கு) 1970 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 25 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையில் "கீழைத்தேய சங்கீத/நடன ஆசிரியர் பதவிகள்" என அடையாளமிடப்படவேண்டும்.

2. இப்பதவிகளுக்குரிய சம்பள அளவுத்திட்டங்கள் பின்வருமாறு :

(அ) **கீழைத்தேய சங்கீத/நடன ஆசிரியர்கள்.**—அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தால் அல்லது இந்தியாவிலுள்ள ஒரு நிலையத்தால் கீழைத்தேய சங்கீதம்/நடனம் அல்லது இவ்விரண்டிலும் வழங்கப்படும் தகுதித் தேர்வுப்பத்திரம் அல்லது தராதரப்பத்திரம் பெற்றுள்ளவர்களுக்கு அல்லது அரசினர் நுண்கலைக் கல்லூரியால்/அரசினர் சங்கீத/நடனக் கல்லூரியால் வழங்கப்படும் சங்கீத/நடன இறுதித் தராதரப்பத்திரம் பெற்றுள்ளவர்களுக்கு :

அனுமானச் சம்பள அளவுத்திட்டம் :
ரூபா 1,920—10 × 72—5 × 120—ரூபா 3,240 ;

ஒன்று திரட்டிய சம்பள அளவுத்திட்டம் :
ரூபா 4,170—11 × 90—5 × 144—ரூபா 5,880.

(ஆ) லங்கா காந்தர்வ சபையின்/அரசினர் சங்கீத/நடனப் பரீட்சை அல்லது வட இலங்கைக் கீழைத்தேய சங்கீத சபையின் இறுதித் தராதரப்பத்திரம் பெற்றுள்ளவர்களுக்கு அல்லது சங்கீதத்தில்/நடனத்தில் அல்லது இவ்விரண்டிலும் அரசினர் நுண்கலைக்கல்லூரியால்/அரசினர் சங்கீத/நடனக் கல்லூரியால் வழங்கப்படும் இடைமாணித் தராதரப்பத்திரம் அல்லது இடை மாணித் தராதரப் பத்திரத்தின் தரத்தையதும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் அல்லது நிலையத்தில் தகுதித் தேர்வுப் பத்திரத்துக்கு இட்டுச் செல்வதுமான வேறு தராதரப் பத்திரம் பெற்றுள்ளவர்களுக்கு :

அனுமானச் சம்பள அளவுத்திட்டம் :
ரூபா 1,344—17 × 72—ரூபா 2,568.

ஒன்று திரட்டிய சம்பள அளவுத்திட்டம் :
ரூபா 3,450 × 17 × 90—ரூபா 4,930.

(இ) மேற்றரா பாடசாலைத் தராதர/கல்விப் பொதுத்தராதர (உயர்தர) பத்திரப் பரீட்சையில் சங்கீதத்தில் சித்தி எய்தியவர்களுக்கு அல்லது லங்கா காந்தர்வ சபையின்/அரசினர் சங்கீத/நடனப் பரீட்சை அல்லது வட இலங்கைச் சீழைத்தேய சங்கீத சபையின் இடைமாணித் தராதரப் பத்திரம் பெற்றுள்ளவர்களுக்கு அல்லது சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது சமமான பரீட்சையில் சங்கீதத்தில் திறமைச் சித்தியுடன் சித்தியெய்தியுள்ளவர்களுக்கு :

அனுமானச் சம்பள அளவுத்திட்டம் :
ரூபா 918—13 × 42—1,464.

ஒன்று திரட்டிய சம்பள அளவுத்திட்டம் :
ரூபா 2,880—13 × 60—ரூபா 3,660.

(ii) விவாகச் சகாயப்படி விதிக்கப்பட்டுள்ள வீதங்களின் பிரகாரம் வழங்கப்படும்.

3. **தகவுந்திறன்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தேவைகளைப் பூர்த்திசெய்வதாகத் திருப்தியான சான்று காட்டவேண்டும் :

(அ) மேலுள்ள 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தராதரப் பத்திரங்களில் ஒன்றை அல்லது கூடியவற்றைப் பெற்றிருக்க வேண்டும் ;

(ஆ) 25.10.1970 அன்று 18 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும் :

(ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது);

(இ) சிறந்த நல்லொழுக்கம் உடையவராய் இருக்க வேண்டும் ;

(ஈ) தீவின் எப்பகுதியிலும் சேவை புரியச் சம்மதமாய் இருப்பதுடன் அதற்கான உடல்நலம் உடையவராய் இருக்க வேண்டும் ;

(உ) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

4. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :**

(அ) இப்பதவிகள் நிரந்தரமானவையும் உபகாரச் சம்பள உரித்துடையனவையுமாகும் :

(ஆ) ஆண் நியமதாரி, விதவைகள், அனாதைகள் உபகாரச் சம்பள நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும் ;

(இ) தகுதிகாண் காலம் 3 வருடங்களாகும் ;

(ஈ) (i) சங்கீத, நடன (சிங்கள) ஆசிரியர் பதவிகளுக்கு நியமிக்கப்படுவோர் நியமனத்திகதியிலிருந்து 3 வருடங்களுக்குள் கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரப்) பத்திரப் பரீட்சையில் சிங்கள மொழியில் அல்லது சிங்கள இலக்கியத்தில் சித்தியடைய வேண்டும்,

சிங்களத்தில் தகைமை பெறுதற்கு மூன்று வருடத்துக்கு மேலதிகமாக எடுக்கும் காலம், சம்பள உயர்ச்சிப் பணம் நிறுத்திவைக்கப்பட்ட காலமாகவும் தகுதிகாண் கால நீடிப்பாகவும் கருதப்படும் ;

(ii) சங்கீத, நடன (தமிழ்) ஆசிரியர் பதவிகளுக்கு நியமிக்கப்படுவோர் நியமனத்திகதியிலிருந்து 3 வருடங்களுக்குள் கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரப்) பத்திரப் பரீட்சையில் தமிழ் மொழியில் அல்லது தமிழ் இலக்கியத்தில் சித்தியடைய வேண்டும்,

தமிழில் தகைமை பெறுதற்கு மூன்று வருடத்துக்கு மேலதிகமாக எடுக்கும் காலம் சம்பள உயர்ச்சிப் பணம் நிறுத்திவைக்கப்பட்ட காலமாகவும் தகுதிகாண் காலமாகவும் கருதப்படும் ;

(உ) நியமதாரி, அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைக் காரியப்படுத்துதற்கு, குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துதற்கு ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ள அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கு அமைய வேண்டும் ;

(ஊ) இந்நியமனம் அரசினர் சேவை ஆணைக்குழு, விதிகள் நிதிப்பிரமாணங்கள், நிருவாகப் பிரமாணங்கள், அரசாங்கத்தால் இனிமேல் விதிக்கப்படக்கூடிய நிபந்தனைகள் ஆகியவற்றுக்கு அமைவதாகும்.

5. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை, மூலங்களை அல்ல—இணைத்தனுப்ப வேண்டும் :

(அ) பிறப்புச்சாட்சிப் பத்திரம் :

(ஆ) விண்ணப்பிக்கும் பதவிக்குப் பொருத்தமுடைய கல்வித்தராதரப் பத்திரம் ;

(இ) உரிய பகுதிக் காரியாதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது ஒன்று உட்பட இரண்டு சமீப கால நற்சாட்சிப்பத்திரங்கள்.

குறிப்பு 1.—தராதரப் பத்திரங்களின் பிரதிகளே—மூலமல்ல—விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டும்.

குறிப்பு 2.—மேற்குறித்த சாதனங்களின் பிரதிகளை இணைத்தனுப்பத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

குறிப்பு 3. மேற்குறித்த சாதனங்களின் மூலங்கள், நியமிக்கப்படும் நேரத்தில் கேட்கப்படும்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

6. அரசினர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்கள் சேவை புரியும் திணைக்களத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

7. விண்ணப்பங்களும் அவை தொடர்பான எக்கடிதங்களும் இவ் வறிவித்தலின் 1 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள விலாசத்துக்கே அனுப்பப்பட வேண்டும். இவ்வமைச்சின் எவ்வுத்தியோகத்தரின் சொந்த விலாசத்துக்கும் அவை அனுப்பப்படக்கூடாது.

8. வர்த்தமானியின் I ஆம் II ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசினர் சேவையினுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமையும் பொது நிபந்தனைக்குக் கவனம் கோரப்படுகிறது.

9. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுதற்கான கடைசித்திகதியின் பின் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

10. அஞ்சலில் ஏற்படக்கூடிய தாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு தமது விண்ணப்பங்களை நேரகாலத்துக்கு அனுப்பி வைக்குமாறு விண்ணப்பதாரிகளுக்கு ஆலோசனை கூறப்படுகிறது.

பீ. உடகம,
நிரந்தரச் செயலாளரும்,
மகா வித்தியாதிபதியும்.

கல்வி அமைச்சு,
மாலாய் வீதி,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 21 ந் உ.

## மாதிரிப்படிவம்

**அரசினர் பாடசாலைகளிலுள்ள கீழைத்தேய, சங்கீத/நடன ஆசிரியர் பதவிகளுக்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் (சொந்தப் பெயர் முதல்) : ————.
(தெளிவாக எழுதுக)

2. சொந்த விலாசம் : ————.

3. பால் : ————.

4. சாதியம் : ————.
(வம்சாவழி காரணமாகவா, பதிவுகாரணமாகவா இலங்கையர்.)

5. விவாகம் செய்தவரா/செய்யாதவரா : ————.

6. பிறந்த திகதியும் இடமும் : ————.

7. 25.10.70 அன்றுள்ளபடி வயது : ————.

8. விண்ணப்பதாரியின் தகப்பன் பிறந்த இடம் : ————.

9. விண்ணப்பதாரியின் தாய் பிறந்த இடம் : ————.

10. கீழைத்தேய சங்கீதத்தில்/நடனத்தில் பெற்றுள்ள தகைமைகள் பெற்றுள்ள தராதரப் பத்திரம் : ————.
தராதரப் பத்திரம் பெற்ற வருடம் : ————.

11. கல்வித்தகைமைகள் : ————.

12. சிங்களத்தில்/தமிழில் பெற்றுள்ள ஆகக்கூடிய தகைமை :————

13. யாதேனும் விசேட உரிமைகள், தகைமைகள், அனுபவம் ஆகியவை பற்றிய விபரங்கள் : ————.

14. முன் யாதேனும் உத்தியோகத்தில் இருந்திருப்பின் விபரங்களும், அதிலிருந்து விலகியதற்கான காரணங்களும் : ————.

15. தற்போது உத்தியோகத்திலிருப்பின் அது பற்றிய விபரங்கள் : ————.

16. தெரிவு செய்யப்படின் முதல் நியமனம், கோர விரும்பும் யாதேனும் ஐந்து மாவட்டங்களின் பெயர்களை முன்னுரிமைக் கிரமப்படி குறிப்பிடுக : ————.

1.

2.

3.

4.

5.

மேலே கொடுத்துள்ள விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையுமென நான் உறுதிப்படுத்துகின்றேன். மேலும், இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக்காணப்படின், தெரிவுக்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்துக்குப் பின்னராயின் எவ்வித நஷ்டஈடுமின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் எனவும் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

10-143—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### பயிற்சி நிலையிலான தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பயிற்சி நிலையிலான தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளுக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்.**—பரீட்சார்த்திகள் க. பொ. த. (சாதாரணதர)ப் பத்திரப் பரீட்சையில் ஆறு பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி, சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது, அதற்குச் சமமான உயர்ந்த பரீட்சையில், தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதிகம், ஆகியவற்றில் திறமைச் சித்தியுடன் சித்திபெற்றிருத்தல் வேண்டும். பொறிமுறை வரைதல், இரசாயனம் ஆகியவற்றில் சித்தியடைந்தோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**வயது எல்லை.**— 17—22 வருடங்கள்.

**பயிற்சிக் காலத்தின்போது வழங்கப்படும்படி.**—பயிற்சி ஆரம்பம் முதல் தொழில்நுட்ப உதவியாளர் தரம் 3 பதவி வழங்கப்படும்வரை பயிற்சியாளரின் ஒழுக்கமும், தொழில் முன்னேற்றமும் திருப்திகரமாக இருந்தால் பின்கண்டவாறு படி வழங்கப்படும் ;—

முதல் வருடம்.—நாளொன்றுக்கு எல்லாம் அடங்கிய படியாக ரூபா 7 வழங்கப்படும் ;

இரண்டாம் வருடம்.—நாளொன்றுக்கு எல்லாம் அடங்கிய படியாக ரூபா 8 வழங்கப்படும் ;

மூன்றும் வருடம்.—நாளொன்றுக்கு எல்லாம் அடங்கிய படியாக ரூபா 9 வழங்கப்படும்.

**முறியும் ஒப்பந்தமும்.**—பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் ரூபாய் மூவாயிரம் மதிப்புள்ள இரண்டு பிணையுடன்கூடிய முறி ஒன்றிலும் ஒப்பந்தமொன்றிலும் கைச்சாத்திடும்படி கேட்கப்படுவார்கள். பயிற்சிக்காலத்தின்போதோ அல்லது பயிற்சி பூர்த்தியாகிய ஐந்து ஆண்டுகளுக்குள் பரீட்சார்த்தி விலக நேரிட்டால் அவருக்கு வழங்கப்பட்ட பணம் முழுவதும் அல்லது அவரது பயிற்சிகாலம் முதல் விலகும் காலம் வரையும் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட செலவை பரீட்சார்த்தி திருப்பிக்கொடுக்கவேண்டும். பரீட்சார்த்தியின் கவலையீனத்தால் காணமற்போன அல்லது சேதத்திற்குள்ளான பொருளின் பெறுமதித் தொகையையும் கூட்டுத்தாபனத்திற்கு பரீட்சார்த்தி செலுத்துதல் வேண்டும்.

**பிணைப்பணம்.**—கூட்டுத்தாபனத்தின் மா அதிபர் நிர்ணயிக்கின்ற பிணைப்பணத்தை பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுபவர் செலுத்தும்படி கேட்கப்படுவார்.

**நியமனம்.**—பரீட்சார்த்திகள் பயிற்சிக்காலத்தின்போது " சிட்டி அன்ட் கில்ட்ஸ் " இடைநிலைப் பத்திர தந்தித் தொடர்பு தொழில்நுட்ப பயிற்சியில் சித்தியடைதல் வேண்டும். பயிற்சி வெற்றிகரமாக பூர்த்தியானதும், பரீட்சார்த்தி ரூபா 350—505 (5 × 15—4 × 20) சம்பள விகித அடிப்படையிலான தொழில்நுட்ப உதவியாளர் தரம் III பதவியில் நியமிக்கப்படுவார். தொழில்நுட்ப உதவியாளர் தரம் II, தரம் I பதவி உயர்வுகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் நிபந்தனைகளுக்கு ஏற்ப, அமுல் செய்யப்படும்.

இலத்திரனியல், மின்சார பொறியியல் ஆகியவற்றில் ஏற்கனவே பயிற்சிபெற்றுக் கொண்ட பரீட்சார்த்திகள் தொடர்பாக மேலே குறிப்பிடப்பட்ட வயது எல்லையும் பயிற்சி நீடிக்கும் காலவரையும் தளர்த்தப்படும்.

இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, 1970 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதிக்குப் பிந்தாமல், மா அதிகாரி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கொழும்பு 7 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மூலையில் " பயிற்சி நிலையிலான தொழில்நுட்ப உதவியாளர் " எனக் குறிப்பிடல் வேண்டும்.

சுசில் முனசிங்ஹ,
மா அதிகாரி.

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம்,
கொழும்பு,
1970 ம் ஆடு செப்டம்பர் மீ 24 ந உ.

### மாதிரி விண்ணப்பப்படிவம்

#### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

விண்ணப்பிக்கும் பதவி :————————,

1. முழுப் பெயர் :—————.
   (அ) முதலெழுத்துடன் பெயர் :—————.
   (திரு. திருமதி அல்லது செல்வி என்பதைக் குறிப்பிடவும்.)
2. சொந்த முகவரி :—————.
3. பிறந்த திகதி :—————.
   (அ) 1970 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி வயது :— வரு. :—————. மாதம் :—————. நாள் :—————.
   (பிறப்புச் சாட்சிப்பத்திரம் இணைக்கப்படுதல் வேண்டும்)
4. தேசிய இனம் :—————.
5. கல்வித் தகைமை, பயிற்சி :—————.

| கல்விகற்ற பாடசாலைகள் | திகதி | சித்தியடைந்த பரீட்சை | வகித்த பொறுப்பான பதவிகளும் பங்கு பற்றிய நடவடிக்கைகளும் |
|---|---|---|---|

6. தேர்ச்சித் தராதரம் :
   சிங்களம் :—————.
   தமிழ் :—————.
   ஆங்கிலம் :—————.
   (தராதரப் பத்திரங்கள் இணைக்கப்படல் வேண்டும்)
7. அனுபவம்.—முன்பு பெற்ற அனுபவங்களும், வகித்த பதவிகள் பற்றிய விபரமும் வரிசைப்படி குறிப்பிடப்படல் வேண்டும் :—————.
8. சொந்த வாழ்க்கையில் ஈடுபாடு கொண்ட உறவினர்கள் அல்லாத மூன்று நடுவர்களின் பெயரும், முகவரியும், பதவியும் :—
   1. —————.
   2. —————.
   3. —————.
9. நற்சான்றிதழ்கள் பெறப்பட்டவர்களின் பெயர்களும், பதவிகளும் : —————.
10. வேறு விபரங்கள் :—————.

இவ் விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்பட்டதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்டஈடின்றியும் விலக்கப்படுவதற்கு நான் பாத்திரமாவேன் எனவும் அறிவேன்.

—————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :—————.

10-160—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### நிருவாகக் கல்விக் கலைக்கழகம்

#### பொது நிதி முகாமையில் தகுதித் தேர்வுப் பத்திரம்—1971

நிருவாகக் கல்விக் கலைக்கழகத்தால் நடத்தப்படும் பொது நிதி முகாமையில் தகுதித் தேர்வுப் பத்திரம் பெறுவதற்கான நான்காவது பயிற்சித் தொடர் வகுப்பு 1971 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஆரம்பமாகும். அரசாங்க கணக்காளர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தரிடமிருந்து இப்பயிற்சித் தொடர் வகுப்புக்குத் தெரிவு பெறுவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 31.12.70 இல் விண்ணப்பகாரர் 49 வயதுக்குக் குறைந்தவர்களாக இருக்க வேண்டும்.

2. பயிற்சித் தொடர் வகுப்பு பற்றிய விபரங்கள் பின்வருமாறு :—(i) பொது நிதி முகாமையில் தகுதித் தேர்வுப் பத்திரக் கல்வி இரு பகுதிகளாக இருக்கும். இத்தொடர் பயிற்சி வகுப்பின் முதலாவது பகுதி ஐந்து மாதங்கள் வரை நீடிக்கும். இரண்டாவது பகுதி நான்கு மாதங்கள் எடுக்கும்.

(ii) விரிவுரைகளோடு இத்தொடர் பயிற்சி வகுப்பு செய்முறைப் பயிற்சி, தேவையான இடங்களுக்கு விஜயம் செய்தல், வீட்டுவேலை, தேர்வுகள், ஆகியவற்றையும் உள்ளடக்கியது.

(iii) இத்தொடர் பயிற்சி வகுப்புக்குத் தெரிவு செய்யப்படுபவருக்குத் தொடர் பயிற்சி வகுப்புக் காலம் வரை அதாவது 9 மாத காலம் முழு வேதன விடுமுறை வழங்கப்படும்.

(iv) பயிற்சியாளர்கள் பகுதி II ஐத் தொடர்வதற்கு அனுமதிக்கப்படுமுன்னர் தொடர்பயிற்சி வகுப்பில் பகுதி I இல் உள்ள எல்லாப் பாடங்களிலும் தேறவேண்டும். ஒரு பரீட்சார்த்தியும் பகுதி I தேர்விலோ பகுதி II தேர்விலோ இரு முறைகளுக்கு மேல் உட்கார அனுமதிக்கப்படமாட்டார்.

(v) தொடர்பயிற்சி வகுப்புக் காலத்தில் ஒவ்வொரு மாதமும் பயிற்சியாளரின் முன்னேற்றத்தை மதிப்பிடும்பொருட்டு தேர்வுகள் நடத்தப்படும். அடுத்தடுத்து இத்தகைய இரு தேர்வுகளில் தவறும் பயிற்சியாளர் 'தரப்படுத்துங் குழுவால்' அவ்வாறு அவர் தவறிவிட்டார் என உறுதி செய்யப்படும் பட்சத்தில் தொடர் பயிற்சி வகுப்பில் இருந்து அகற்றப்படுவார்.

(vi) தொடர்பயிற்சி வகுப்புக்கான பாடத் திட்டம் பின் வருமாறு :—

பகுதி I (5 மாதங்கள்)

உயர்தர கணக்குமுறை

என்பார்வை முறை

செலவுக் கணக்குமுறை

பொது வர்த்தக அறிவு

சட்டம்

பொது நிதியும், பொருளாதாரமும்

புள்ளிவிபரம்.

பகுதி II (4 மாதங்கள்)

பொது நிதி முகாமை

முகாமை கணக்குமுறை—பொது

முகாமை கணக்குமுறை—செலவு

அலுவலக முகாமை

முகாமையின் கொள்கைகளும் செய்முறையும்.

(vii) பகுதி I இல் 7 கேள்வித்தாள்களும் பகுதி II இல் 5 கேள்வித்தாள்களும் இருக்கும்.

(viii) தேற்றத்துக்கான அளவு புள்ளிகள் ஒவ்வொரு தாளிலும் 40% ஆகவோ அல்லது 'தரப்படுத்தும் குழு' முடிவு செய்வதற் கேற்பவோ இருக்கும். தேர்வில் தேறுவதற்கு ஒரு பரீட்சார்த்தி ஒவ்வொரு கேள்வித் தாளிலும் தேவைப்படும் மொத்தப் புள்ளி களைப் பெறவேண்டும்.

(ix) வெற்றிகரமாகத் தொடர்பயிற்சி வகுப்பை முடித்ததும் பொது நிதி முகாமையில் தகுதித் தேர்வுப் பத்திரம் பயிற்சியாள ருக்கு வழங்கப்படும்.

(x) பொது நிதி முகாமையில் தகுதித் தேர்வுப் பத்திரம் பெறு வதில் முதலாவது தடவையிலேயே வெற்றிபெறும் ஒவ்வொரு உத்தியோகத்தரும், 5 ஆண்டுகளுக்கு மாதந்தோறும் ரூபா 50 விசேட படி பெறுவார்.

(xi) தொடர்பயிற்சி வகுப்புக்குத் தெரிந்தெடுக்கப்படும் ஒவ் வொரு உத்தியோகத்தரும் திறைசேரி சுற்று நிருபம் இல. 627 க்கு அமைய ஓர் உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டும்.

3. மாதிரிப்படிவத்துக்கிணங்க விண்ணப்பங்கள் அவ்வத்திணைக் களத் தலைவர்களுக்கூடாக 32, கிளென் அபெர் பிளேஸ், கொழும்பு-3 இல் இருக்கும் நிருவாகப் பயிற்சி அதிபதிக்கு 28.10.1970 க்கு முன்னர் கிடைக்கக் கூடிய விதத்தில் அனுப்பப்படவேண்டும்.

கூட்டுத்தாபனங்கள் தங்கள் உத்தியோகத்தர்களை வழக்கமான பயிற்சிக்குரிய கட்டணத்தைச் செலுத்தி இந்தத் தொடர் பயிற்சி வகுப்பில் பயிற்சிபெற அனுப்பலாம். கட்டணங்கள் பற்றிய விபரங் களைக் கீழே கையொப்பமிட்டிருப்பவரிடம் விண்ணப்பித்துப் பெற் றுக்கொள்ளலாம்.

எச். எஸ். வணசிங்க,
நிருவாகப் பயிற்சி அதிபதி.

விண்ணப்பப் படிவம்

பொது நிதி முகாமையில் தகுதித் தேர்வுப் பத்திரம்—1971

1. முழுப் பெயர் (தெளிவாக எழுதவும்) :————.
2. வயது :————. பிறந்த நாள் :————.
3. திணைக்களமும் முழுத் தபால் முகவரியும் :————.
4. அரசாங்க கணக்காளர் சேவையில் சேர்ந்த நாள் :————
5. தற்போது வகிக்கும் தரமும், இத்தரத்தினைப் பெற்ற நாளும் :————.
6. கல்வித் தகைமைகள் :————.
7. பிற தகைமைகள் ஏதாவது பயிற்சித் தொடர் வகுப்புக்களுக் குப் போய் இருந்தால் அவை உள்ளடக்கி :————.

————,
ஒப்பம்.

திகதி :————.

10-103—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## உணவுத் திணைக்களம்

### கோரிக்கை அறிவித்தல்

பழுதடைந்த மா ஏற்றுமதி செய்வதற்குக் கோரிக்கைகள் அழைக்கப்படுகின்றன. திருக்கோணமலை, கொழும்பு இரு இடங் களிலுமுள்ள பண்டசாலைகளுக்கும் துறைகளுக்குமான விலைகளைக் குறிப்பிட வேண்டும்.

2. கோரிக்கையாளர்கள் வெளிநாட்டில் உள்ள தம் தலைவர்களிட மிருந்து உறுதியுடைய பதிவுகளுக்கான திருத்தியுள்ள நிரூபணங் களைக் காட்ட வேண்டும். தேவையேற்படின் மாவைப் புனர்நிலைமை செய்தல், மீட்டும் பொதிதல் முதலானவற்றைக் கொள்வனவுகாரர் களே திருக்கோணமலையிலும் கொழும்பிலுமுள்ள திணைக்களப் பண்டசாலைகளிலும் கொழும்பில் உள்ள துறையிலும் செய்ய வேண்டும். கொழும்பிலும் எல்லைப்புறங்களிலுமுள்ள பண்டசாலை களிலிருந்து மட்டும் கொழும்புத் துறைக் குதங்களுக்கு ஏற்றிச் செல்லும் செலவும் திருக்கோணமலை, கொழும்பு இரு சுங்கக் கொடுப்பனவுகள் மட்டுமே திணைக்களத்தால் ஏற்றுக்கொள்ளப் படும். வெளிநாட்டுச் செலாவணிச் செலவுச் சான்றிதழ் கொள் வனவுகாரர்களுக்கு அனுமதிக்கப்படமாட்டா. நாணயக் கடிதங்கள் உணவு ஆணையாளர் பெயரிற் திறக்கப்பட்டு ஏற்றுபொருளுண்டிய லும் வார்நாமமும் சமர்ப்பிப்பதின் பேரிலேயே கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டும்.

3. சாமேசுக் கூலக்களஞ்சிய உதவி உணவுக் கட்டுப்பாட்டாள ருடனும் திருக்கோணமலைத் துணை உணவுக் கட்டுப்பாட்டாளருட னும் ஏற்கெனவே ஒழுங்குசெய்து பழுதடைந்த மாவின் தொகை யைப் பரிசோதிக்கவும், தேவையாயின் மாதிரியை எடுத்துச் செல்லவும் முடியும்.

4. கோரிக்கைகள் இணைப்பிரதிகளில் மனுச் செய்யப்பட்டு "பழுதடைந்த மா ஏற்றுமதி செய்வதற்கான கோரிக்கை" என இடது மேலுறையில் எழுதப்பட்ட ஒரே உறையில் இட்டு முத்திரை வைத்து, உணவு ஆணையாளருக்குப் பதிவுக் கடிதத்தில் அனுப்ப வேண்டும் அல்லது உணவு ஆணையாளர் அலுவலகத்தில் உள்ள கோரிக்கைப் பெட்டியில் நேரில் இடவேண்டும். இது புரட்டாதி மாதம் 23 ஆந் நாள் 1970 ஆம் ஆண்டு பி. ப. 2.30 மணிக்கு முன் னுக உணவு ஆணையாளரிடம் கிடைக்கக்கூடியதாகச் செய்யப்பட வேண்டும். கோரிக்கைகள் 1970 ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 23 ஆம் நாள் பி.ப. 2.30 மணிக்கு உணவு ஆணையாளர் அலுவலகத் திற் திறக்கப்படும். கோரிக்கையாளர்கள் விரும்பினுற் திறக்கப் படும் சமயத்தில் வரவுதரலாம்.

5. புறம்பான கோரிக்கைப் படிவங்கள் கிடைக்கமாட்டா. எனி னும் 250 ரூபா கட்டுப்பணம் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்று அதைக் கோரிக்கையுடன் இணைத்துவிட வேண்டும். மேலதிக விபரங்கள் கீழ்க் கையொப்பமிட்டவரிடம் கிடைக்கும்.

6. உணவு ஆணையாளர் நியாயங் காட்டாது ஒன்றையோ எல்லாக் கோரிக்கைகளையுமோ நிராகரிக்க உரிமையுடையவர்.

7. ஏற்கெனவே விளம்பரம் செய்யப்பட்டதின் பேரிற் செய்யப் பட்ட கோரிக்கைகள் இத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

சி. ஈ. எச். அமரசேகர,
உணவு ஆணையாளர்.

330, யூனியன் இடம்,
கொழும்பு 2, 21.9.70.

10-50—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926

## இலங்கை அரச கடற்படை—கல்பிட்டிக் கடற்படைத்தளம்

1970 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 1971 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை பின்வரும் சேவை வழங்குதற்கும் கோலவுடைகள், துணிமணிகள் சலவை செய்வதற்குமான கேள்விப்பத்திரங்கள் கீழே கொடுக்கப்பட்ட திகதியில் மு. ப. 10 மணிவரை கொழும்பு 1, இலங்கை அரச கடற்படை, தலைமை அலுவலகம், த. பெ. 593, இல் உள்ள கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| (i) வழங்கல்/சேவை | (ii) கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் கொடுக்கப்படும் கடைசித் திகதி | (iii) கேள்விப்பத்திரங்கள் முடிவடையும் திகதி | (iv) கேள்விப்பத்திரங்கள் ஆரம்பிக்கப்படும் திகதி |
|---|---|---|---|
| (அ) கல்பிட்டிக் கடற்படைத் தளத்துக்கு காலை உணவு வகைகள், மரக்கறிகள், தேங்காய்கள், பாலுணவுப்பொருட்கள், இறைச்சி, புதிய மீன் முதலியன வழங்குதல் | 18.10.1970 பகல் 12 மணி .. | 20.10.1970 முற்பகல் 10 மணி | 20.10.1970 முற்பகல் 10.30 மணி |
| (ஆ) கல்பிட்டிக் கடற்படைத் தளத்துக்கு கோலவுடைகள் துணிமணிகள் சலவை செய்தல் | 18.10.1970 பகல் 12 மணி .. | 20.10.1970 முற்பகல் 10 மணி | 20.10.1970 முற்பகல் 10.30 மணி |

விண்ணப்பகாரர்களின் பண உறுதிநிதி நிலைமையைப் பற்றிய மற்றும் சேவைகளைச் செயற்படுத்தும் திறமை ஆகிய சம்பந்தமான முழு விபரத்துடன் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்படும் மனுவின் பெயரில் மேற்கூறப்பட்டுள்ள சேவைகளுக்குரிய விண்ணப்பப் பத்திரங்கள் ஒவ்வொரு சேவைக்கெதிரே II ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள திகதிகளில், பிற்பகல் 12.00 மணிவரை, கொழும்பு 1, இலங்கை அரசகடற்படை, தலைமை அலுவலகம், கொடிமர வீதி, கடற்படைத் தளபதியால் வழங்கப்படும்.

விண்ணப்பப்பத்திரங்கள் வழங்கப்படுமுன், மேற்கூறப்பட்ட ஒவ்வொரு சேவைக்கும் திரும்பப் பெறக்கூடிய ரூபா 75.00 வீதம் கட்டணம் செலுத்தப்படல்வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. காசுக் கட்டளைகள் கடற்படைத் தளபதியின் பெயரில் எழுதப்படல் வேண்டும்.

விண்ணப்பகாரர் விண்ணப்பப் பத்திரங்கள் கோரும்போது தங்கள் முழுப் பெயர்களையும் முகவரிகளையும் அறிவித்தல் வேண்டும். கொந்தராத்தைச் செயற்படுத்தும் திறமை பற்றிய போதிய சான்றுகளைக் கேட்கப்படும் போது சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பகாரர் தாம் எச்சேவை வழங்குதற்கு விண்ணப்பிக்கிறார் என்பதைப் பிரதானமாகக் கூறுதல் வேண்டும். (அ) அல்லது (ஆ) பகுதியின் கீழ் வெவ்வேறான வழங்குதற் சேவைக்கு கேள்விப்பத்திரங்களை அனுப்ப வேண்டும்.

கடற்படைத் தளபதி,
இலங்கை அரச கடற்படை,
தலைமை அலுவலகம்,
த. பெ. 593,
கொழும்பு 1.

டீ. வீ. ஹன்ரர்,
கொமடோர்,
கடற்படைத் தளபதிக்காக.

10–102—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926

---

## கட்டடங்கள் திணைக்களம்

### கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலைய விடமைப்புத் திட்டத்தில், குடியிருக்கும் இல்லங்கள் கட்டுவதற்கான கட்டடப் பொருள்கள் வழங்குதல்

மேற்படி திட்டத்திற்குப் பெருந்தொகையான கட்டடப் பொருள்கள் தேவைப்படுகின்றன. இப்பொருள்கள் கேள்விப் பத்திரங்கள் மூலம் கட்டுநாயக்காவில் உள்ள கட்டடங்கள் திணைக்களத்தின் கட்டுநாயக்கா விமானத்தளத் திட்டத் தலைமை நிர்மாணப் பொறியியலாளர் அவர்களுடன் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்டவர்களிடமிருந்து மாத்திரமே, காலத்திற்குக் காலம் பெற்றுக் கொள்ளப்படும்.

2. பொருள்கள் வழங்குவதற்காகத் தங்களைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் அனைவரும் தங்கள் விண்ணப்பங்களை " தலைமை நிர்மாணப் பொறியியலாளர், கட்டுநாயக்கா விமானத்தளத் திட்டம், கட்டடங்கள் திணைக்களம், கட்டுநாயக்கா " என்ற முகவரிக்கு 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26 ம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். தபால் உறையின், இடதுபக்க மேல் மூலையில் " பொருள்கள் வழங்குதல்—கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலைய வீடமைப்புத் திட்டம் " என்னும் சொற்கள் இருத்தல் வேண்டும். விண்ணப்பக்காரர்கள் தங்களது பதிவு செய்வதற்கான கடிதங்களுடன் பின்வரும் தகவல்களையும் சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) விண்ணப்பக்காரர் வழங்கக்கூடிய பொருள்களின் நிரல் ;

(ஆ) விண்ணப்பக்காரர் தமக்குச் சொந்தமாக வைத்திருக்கும் லொறிகள், ரிப்பர்கள், பாரம் இழுக்கும் பின்னிணைப்புடன் கூடிய டிராக்டர்கள் முதலிய வாகனங்களின் பதிவு இலக்கங்கள் அத்தகைய ஒவ்வோர் வாகனமும் நடப்பு வருடத்திற்குப் பாவனை அனுமதிப் பத்திரம் உடையதா என்பதுவும், காப்புறுதி செய்யப்பட்டதா என்பதும் குறிப்பிடல் வேண்டும் ;

(இ) முந்திய காலங்களில் இத்தகைய அனுபவம் ஏதும் இருப்பின் அவற்றுக்கான எழுத்து மூலமான ஆதாரங்கள்.

3. தேவைப்படும் பொருள்களின் நிரல் பின்வருமாறு :—

(1) ¾ " சல்லிக்கல்
(2) 1 " சல்லிக்கல்
(3) 1½ " சல்லிக்கல்
(4) 2 " சல்லிக்கல்
(5) 6 "—9 " கருங்கல்
(6) செங்கட்டிகள்
(7) ஆற்று மணல்
(8) சூளைச் சுண்ணாம்பு (அவிந்ததும், அவியாததும்)
(9) கப்புக்கள் (காட்டு மரம்)
(10) மூங்கில்கள் (சாரமரத்திற்கு)
(11) தென்னோலைக் கிடுகு.

சு. நாகலிங்கம்,
தலைமை நிர்மாணப் பொறியியலாளர்,
கட்டுநாயக்கா விமானத்தளத் திட்டம்.

கட்டடங்கள் திணைக்களம்,
சர்வதேச விமான நிலையம்,
கட்டுநாயக்கா,
1970 ம் ஆண்டு செப்டம்பர் மீ 24 ந் வ.

10–131—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926

## அஞ்சல் தந்திப் போக்குவரத்துத் திணைக்களம்

*தலைவர், அஞ்சல் தந்திப் போக்குவரத்துத் திணைக்களக் கேள்விச் சபை, நிர்வாகப் பிரிவு, 6 வது மாடி, அஞ்சல் தந்திப் போக்குவரத்துத் தலைமை அலுவலகக் கட்டிடம், கோட்டை, கொழும்பு 1 ல் 50,000 ஒற்றைவழி கொங்கிறீட் குழாய்களை வழங்குவதற்கும், ஒப்படைப்பதற்குமான கேள்விகளை 1970.10.21 ஆம் திகதி காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்வார்.*

*கொழும்பு 1, கோட்டை, அஞ்சல் தந்திப் போக்குவரத்து தலைமை அலுவலகக் கட்டிடம், 5 ம் மாடியிலுள்ள பிரதான தந்திப் போக்குவரத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில், இரட்டைப் பிரதிகளில் கேள்விப் பத்திரங்களைத் தயாரித்தல் வேண்டும். பி. த. பொறியியலாளரிடமிருந்து சகல விவரங்களையும் அறியலாம். அவரின் அலுவலகத்தில் கேள்விப் பத்திரச் சாதனங்களையும் பரிசீலனை செய்யலாம்.*

*ஒரு அஞ்சல் அலுவலகத்தின் அதிபருடன் அல்லது கொழும்பு 1, கோட்டை, ம. த. க. தந்திக் கணக்காளரிடம் ரூபா 200 கேள்விக் கட்டுப்பணமாகக் கட்டி, அதன் பற்றுச் சீட்டை சமர்ப்பித்து விண்ணப்பிப்பவர்களுக்கு 1970.10.18 ந் திகதி மதியம் 12 மணி வரை பிரதான தந்திப் போக்குவரத்துப் பொறியியலாளரின் அலுவலகத்தில் கேள்விப்பத்திரச் சாதனங்கள் வழங்கப்படும்.*

*டீ. எம். அபேசேகரா,*
*அஞ்சல் அதிபர் நாயகமும், தந்திப் போக்குவரத்து அதிபரும்.*

*நிர்வாகப் பிரிவு,*
*6 வது மாடி,*
*அஞ்சல் தந்திப் போக்குவரத்து தலைமை அலுவலகம்,*
*லோட்டஸ் வீதி, கோட்டை,*
*கொழும்பு 1.*

*10-97—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926*

---

## தேசிய பாற்சபை

### வெற்றுப் பெட்டிகள், பைகள், கழிவுப் பால்மா ஆகியன கொள்வனவு செய்வதற்கான கேள்விப் பத்திரம்

பொல்நறுவை ஒடுக்கிய பால் தொழிற்சாலையில் இருந்து கீழ்வருவன வற்றைக் கொள்வனவு செய்யவும் அகற்றவும் கீழே கையொப்பமிட்டவரால் 1970 ம் ஆண்டு ஒற்றோபர் 23 ம் திகதி பிற்பகல் 2 மணி வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**விவரம்**

(1) 112 இருத்தல் கொள்ளக் கூடிய 6 படைக் கடதாசியாலான வெற்றுச் சீனிப் பைகள்.
(2) 56 இருத்தல் கொள்ளக்கூடிய பல படைச் சுவர்க் கடதாசியாலான பால்மா வெற்றுப்பைகள்.
(3) 56 இருத்தல் கொள்ளக்கூடிய பொலிதீன் வெற்றுப் பைகள்.
(4) 45 கலன்கள் வெண்ணெய், எண்ணெய் வெற்றுத் தகரப் பீப்பாய்கள்.
(5) வெற்று மரப் பெட்டிகள்.
(6) பழுதான வெற்று ஒடுக்கிய பாற்றகரங்கள்.
(7) உருக்குப் பட்டிகள்.
(8) ஆடையெடுத்த பால்மாக் கழிவுகள்.

இவற்றைப் பொல்நறுவை ஒடுக்கிய பால் தொழிற்சாலை அல்லது ராகம, வெலிசறையில உள்ள (நீர்கொழும்பு வீதியில் 8 ம் மைலில்) பால்மாத்திட்டத் தொழிற்சாலையில வழக்கமான அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

கேள்விப்பத்திரங்கள் ராகம வெலிசறையில் உள்ள பாற்சபையின் பால்மாத்திட்டத் தொழிற்சாலையின் கணக்காளரால், மீளப் பெறக் கூடிய கட்டுப்பணம் 250 ரூபாவும் மீளப் பெறமுடியாத கேள்விப் பத்திரக் கட்டணம் 25 ரூபாவும் செலுத்துவோருக்கு மட்டும் 1970 ம் ஆண்டு ஒற்றோபர் 21 ம் திகதி பகல் 12 மணிவரை கொடுக்கப்படும்.

ஏனைய விபரங்களை, கொழும்பு 5, நாரஹென்பிற்றுவில் உள்ள பாற்சபை அலுவலகத்தின் வழங்கு பொருள் முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

*தலைவர்,*
*பாற்சபை.*

பாற்சபைத் தலைமைக் காரியாலயம்,
33, எலிபாங் தெரு,
கொழும்பு 5,
1970 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 24 ந் உ.

10-190—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926

---

## சிறைச்சாலைப் பகுதி கேள்விப் பத்திர அறிவித்தல்

### பால்ய குற்றவாளிகள் பயிற்சிப் பாடசாலை

### வத்துபிட்டிவல

*வத்துபிட்டிவல பால்யகுற்றவாளிகள் பயிற்சிப் பாடசாலையின் றப்பர் தோட்டத்தில் றப்பர் பால் வாங்குவதற்குரிய கேள்வி.*

*(1) மேலே குறிப்பிடப்பட்டுள்ள விளை பொருள் வாங்குவதற்குரிய கேள்விப் பத்திரங்கள் 1970 ஆண்டு ஐப்பசி மாதம் 15 ம் திகதி 10.30 மணிவரை பால்ய குற்றவாளிகள் பாடசாலையின் அதிகாரி அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*(2) இதற்கான அச்சிடப்பட்ட பத்திரங்கள் கிடைக்கப்படமாட்டா. இதற்குரிய கேள்விப் பத்திரங்கள் சில் முத்திரை அடிக்கப்பட்ட கவர்களுள் அனுப்பப்படல் வேண்டும். கவரின் இடது பக்க மேல் மூலையின் "றப்பர் பால் வாங்குவதற்குரிய கேள்வி பத்திரம்" என குறிப்பிட்டு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது பயிற்சிப் பாடசாலையின் பிரதான வளியில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடலாம்.*

*(3) கேள்விப் பத்திரங்கள் 15 ம் திகதி ஐப்பசி மாதம் 1970 ம் ஆண்டு பயிற்சிப் பாடசாலையின் அதிகாரி அவர்களால் கந்தோரில் வைத்து மு. ப. 10.35 மணியளவில் திறக்கப்படும் அவ்வேளையில் விண்ணப்பகாரர்கள் சமூகமளிக்க அனுமதிக்கப்படுவர்.*

*(4) ரூபா 10 முற்பணமாக கந்தோரில் கட்டி அதற்குரிய பற்றுச் சீட்டைப் பெற்று அதை கேள்விப் பத்திரத்துடன் இணைக்கப்படல் வேண்டும். கேள்வி பத்திரத்தில் கேட்கப்படும் தொகை சொற்களாலும் இலக்கத்தாலும் குறிப்பிடல் வேண்டும்.*

*(5) கேள்வியில் வெற்றி பெறுபவர் ரூபா 50 பிணைப்பணமாக கட்ட வேண்டும். கேள்விப் பத்திரம் ஏற்கப்பட்டு அவ்வாறாக அறிவிக்கும் அறிவித்தல் தபால் மூலமாகவோ அல்லது கொடுக்கப்படும் விலாசத்திற்குரிய இடத்தில் சேர்ப்பதாலோ இவ் அறிவித்தல் உரியவரை சேர்த்ததாக கருதப்படும்.*

*(6) இக்கேள்வியில் வெற்றி பெறுபவர் றப்பர் பால் வாங்குவதை நிறுத்தினால் அவருடைய பிணைப் பணமான ரூபா 50 ஐ இழக்க நேரிடும்.*

*(7) பால் வெட்டும் நாட்களில் 40 றாத்தல் முதல் 50 றாத்தல் வரை கொடுக்கப்படும். இப்பாலை பயிற்சிப் பாடசாலையின் பிரதான வாசலில் கேள்விப்பத்திரகாரர்களால் கொடுக்கப்படும் பாத்திரங்களில் விநியோகம் செய்யப்படும். அவ்வேளையில் கொடுக்கப்படும் பாலுக்குரிய பணம் கட்டப்படல் வேண்டும்.*

*(8) மேற்கொண்டு விபரங்கள் தேவைப்படின் கீழே ஒப்பமிடப்பட்டுள்ளவரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.*

*ஈ. சி. பிரேமதிலக,*
*அதிகாரி,*
*பால்ய குற்றவாளிகள் பயிற்சிப் பாடசாலை,*
*வத்துபிட்டிவல.*

*10-26/2—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926*

### சிறைச்சாலைப் பகுதி

பால்ய குற்றவாளிகள் பயிற்சிப் பாடசாலை,
வத்துபிட்டிவல

*1970 ம் ஆண்டுக்குரிய கட்டிடப் பொருட்கள் வழங்குவதற்குரிய கேள்விப் பத்திரம்.*

*வத்துபிட்டிவல பால்யக் குற்றவாளிகள் பயிற்சிப் பாடசாலையின் அதிகாரி அவர்களால் 1970 ம் ஆண்டு ஐப்பசி மாதம் மு. ப. 10.30 மணி வரை கீழே குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடப் பொருட்கள் வழங்குவதற்குரிய கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப் படும் :—*

*(1) தென் ஓலை (இரட்டை ஓலை கிடுகு) அளவு 6 × 1½ குறை யாத 100 க்கு.*

*(2) கற்கள் (செங்கற்கள்) அளவு 3¾×4 3/16×2 5/8 1000 க்கு.*

*(3) ஆற்று மணல், கிரவல் போன்ற பொருட்கள் அகற்றப்பட்ட 1 கியூப்.*

*(4) சிறிய கற்கள் ¾ (Metal) 1 கியூப்பு.*

*(5) கல்லு அளவு 6" × 9" (Rubble) 1 கியூப்பு.*

*1. இதற்குரிய அச்சிடப்பட்ட பத்திரங்கள் கிடைக்கப்பட மாட்டா. இதற்குரிய கேள்விப் பத்திரங்கள் சீல் முத்திரையடிக்கப் பட்ட கவர்களில் அனுப்பப்படல் வேண்டும். கவரின் இடது பக்க மேல் மூலையின் "கட்டிடச் சாமான் கொடுப்பதற்குரிய கேள்விப் பத்திரம்" எனக் குறித்து பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது இவ்விடம் உள்ள பிரதான வளியில் உள்ள பெட்டியில் போடலாம்.*

*2. கேட்கப்படும் தொகை சொற்களாலும் இல்க்கத்தாலும் குறிப் பிடல் வேண்டும். தொகை கொண்டு வரும் வாகனச் செலவுகள் அடங்கியதாக இருத்தல் வேண்டும்.*

*3. கேள்விப் பத்திரங்கள் அதிகாரியின் கந்தோரில் 1970 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 15 ம் திகதி முற்பகல் 10.40 மணிக்கு திறக்கப்படும். அவ்வேளையில் விண்ணப்பக்காரர்கள் சமூகமளிக்க அனுமதிக்கப்படுவர்.*

*4. கேள்வியில் வெற்றி பெறுவோர் ரூபா 50 ஐ பிணைப்பணமாக கட்டல் வேண்டும். தேவைப்படும் கட்டிடப் பொருட்களை அறியத் தந்து ஓர் வார காலத்திற்குள் கொடுக்கப்படாவிட்டால் பிணைப் பணமாக கொடுக்கப்பட்ட ரூபா 50 ஐ இழக்க நேரிடும்.*

*5. மேலும் விபரங்கள் தேவைப்படின் கீழே ஒப்பமிடப்பட்டுள்ள வரிடமிருந்துபெற்றுக் கொள்ளலாம்.*

*ஈ. சி. பிரேமதிலக,*
*அதிகாரி,*
*பால்ய குற்றவாளிகள் பயிற்சிப் பாடசாலை,*
*வத்துபிட்டிவல.*

*10-26/3—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926*

---

### சிறைச்சாலைப் பகுதி

பால்ய குற்றவாளிகள் பயிற்சிப் பாடசாலை,
வத்துபிட்டிவல

*வத்துபிட்டிவல பால்ய குற்றவாளிகளின் பயிற்சிப் பாடசாலையின் பழைய வெற்றுச் சாக்கு, வெற்று பீப்பாக்கள் விற்பதற்குரிய கேள்விப் பத்திரம். விற்பனைக்குரிய பொருட்களாவன :*

| | | |
|---|---|---|
| *(1)* | *பண்ணை உணவு வெற்று கருதாசி உறை* | *1325* |
| *(2)* | *வெற்று மாச்சாக்கு* | *600* |
| *(3)* | *கலந்த வெற்றுச்சாக்கு* | *400* |
| *(4)* | *அரிசிச் சாக்கு* | *200* |
| *(5)* | *சீனிச் சாக்கு* | *50* |
| *(6)* | *பழைய புதினப் பத்திரிகை* | *200 றாத்* |
| *(7)* | *பழைய கழிவு தகரத்துண்டு* | *600 றாத்* |
| *(8)* | *4 கலன் கொள்ளக் கூடிய தகர பீப்பாக்கள்* | *50* |

*1. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் காலை 8 மணியில் இருந்து மத்தியானம் 12 மணிவரையும் மதியம் 1 மணியில் இருந்து மாலை 4 மணிவரையும் பார்வையிட அனுமதிக்கப்படுவர்.*

*2. ரூபா 10 முற்பணமாகக்கட்டி அதற்குரிய பற்றுச் சீட்டைப் பெற்று அதை கேள்விப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். ஏலத்தில் வெற்றி பெறுபவர் உடனடியாக பணத்தைக் கட்டி பொருட்களை 7 நாட்களுக்குள் பெற்றுக் கொள்ளல் வேண் டும். இல்லாவிடில் பிணைப்பணமான ரூபா 10 ஐ இழக்க நேரிடும்.*

*4. தபால் மூலம் அனுப்பும் கேள்விப் பத்திரங்களின் கவரின் இடதுபக்க மேல்மூலையில் "பழைய பொருட்கள் வாங்குவதற் குரிய கேள்விப்பத்திரம்" என எழுதி பதிவுத்தபாலில் அனுப்பு தல் வேண்டும் அல்லது பயிற்சிப் பாடசாலையின் பிரதான வழி யில் உள்ள பெட்டியில் போடலாம்.*

*5. குறிக்கப்பட்ட பொருட்களின் விலையை சொற்களாலும் இலக் கத்தாலும் குறிப்பிட வேண்டும்.*

*6. கேள்விப் பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 15 ம் திகதி காலை 10.50 மணிக்கு அதிகாரியின் கந்தோரில் திறந்து பரி சிலனை செய்யப்படும். அவ்வேளையில் விண்ணப்பக்காரர்கள் சமூக மளிக்க அனுமதிக்கப்படுவர்.*

*7. மேலும் விபரங்கள் தேவைப்படின் கீழே ஒப்பம் இடப்பட்ட வரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.*

*ஈ. சி. பிரேமதிலக,*
*அதிகாரி,*
*பால்ய குற்றவாளிகள் பயிற்சிப் பாடசாலை,*
*வத்துபிட்டிவல.*

*10-26/4—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926*

---

### கடற்றொழில் திணைக்களம்

**5½ பரிவலு கொண்ட "டையா" என்ஜின்கள் இணைக்கப்பட்ட "நிப்பொன் மாறு", "சிலோன் மாறு" என்ற இரு பயிற்சி வள்ளங்களின் விற்பனைக்கான கேள்விகள்**

5½பரிவலு கொண்ட "டையா" என்ஜின்கள் இணைக்கப்பட்ட "நிப்பொன் மாறு", "சிலோன் மாறு" என்ற இரு வள்ளங்களின் விற்பனைக்கான கேள்விகளை, கொழும்பு 3, காலிமுகத்திலுள்ள கடற்றொழில் இயக்குநர் ஏற்றுக்கொள்வார்.

மேலதிக விபரங்களும் கேள்விப் பத்திரங்களும் கீழ் கையொப்ப மிட்டுள்ளவரிடமிருந்து 1970.10.16 ந் தேதி பகல் 12 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் 1970.10.23 ந் தேதி பகல் 12 மணிக்கு முடிவுறும்.

ஒவ்வொரு வள்ளத்திற்கும் கேள்வி வைப்புப் பணம் ரூபா 150.

"நிப்பொன் மாறு" எனும் வள்ளத்தை, நீர்கொழும்பு கடற் றொழில் பயிற்சி நிலையத்திலும்: "சிலோன் மாறு" எனும் வள்ளத்தை, நீர்கொழும்பு, தளதுவையிலுள்ள ஜோசப் பீற்றர் பர்னாந்துவின் வள்ளச்சாலையிலும் பார்வையிடலாம்.

கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு 3,
1970 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 25 ந உ.

10–186—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926

# கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

## சுகாதாரத் திணைக்களம்—மட்டக்களப்புப் பிரிவு

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்—1970

| நிலையம் | தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரரின் பெயர் | கிடைத்த கேள்விப் பத்திரங்களின் தொகை | தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரத்தில் உள்ள உணவுகளின் விலை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஊழியர்களுக்கு | | | நோயாளிகளுக்கு | | |
| | | | மீன் | கருவாடு | மரக்கறி | மீன் | கருவாடு | மரக்கறி |
| ஏறாவூர் வைத்தியசாலை .. | ஏ. சிவலிங்கம் .. | 1 .. | 2.00 .. | 1.30 .. | 1.24 . | 2.00 .. | 1.54 .. | 1.30 |
| பொத்துவில் வைத்தியசாலை .. | எம். எம். ஜோதிதாச .. | 2 .. | 2.00 .. | 2.00 .. | 1.60 .. | 2.00 .. | 2.00 .. | 1 48 |
| அக்கரபத்து வைத்தியசாலை .. | ஏ. சிவலிங்கம் .. | 1 .. | 2.50 .. | 2.40 .. | 2.00 .. | 2.50 .. | 2.40 .. | 2.00 |
| களுவாஞ்சிக்குடி வைத்தியசாலை .. | வி. பொன்னம்பலம் .. | 1 .. | 2.25 .. | 2.00 .. | 1.75 .. | 2.00 .. | 1.75 .. | 1.45 |
| வாகரை வைத்தியசாலை .. | வி. ஆறுமுகம் .. | 1 .. | 1.75 .. | 1.50 .. | 1.40 .. | 1.65 .. | 1.35 .. | 1.30 |
| லாகுகலை பிரசவ விடுதி .. | ஏ. சிவலிங்கம் .. | 1 .. | 2.65 .. | 2.60 .. | 2.25 .. | 2.50 .. | 2.45 .. | 2.25 |
| நாவற்காடு பிரசவ விடுதி .. | ஈச்சந்தீவு கி. மு. ச. .. | 1 .. | 2.65 .. | 2.60 .. | 2.40 .. | 2.65 .. | 2.50 .. | 2.35 |

ரி. சண்முகநாதன்,
சுகாதார சேவை அத்தியட்சகர்,
மட்டக்களப்பு.

சுகாதார சேவை அலுவலகம்,
மட்டக்களப்பு,
1970 ம் ஆண்டு செப்டம்பர் மீ 25 ந உ.

10-41—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926.

---

## கொழும்பு கப்புற்றுறை ஆணைக்குழு

### கேள்விப்பத்திரங்களின் முடிவுகள்

| வழங்கும் சாதனங்களின் விபரம் | கிடைத்த கேள்விப்பத்திரங்களின் எண்ணிக்கை | கேள்விப்பத்திரங்களில் வெற்றி பெற்றவரின் பெயர் | ஏற்றுக்கொண்ட விலை |
|---|---|---|---|
| (1) ஒரு செல்ப்–பிராபெல்டு டிரெயிலிங் சக்ஷன் டிரெஜர் வழங்குதல் | 6 நாடுகளிலிருந்து கிடைத்த 12 கேள்விப்பத்திரங்கள் | இஸ்கிகாவாஜிமா ஹரிமாஹெபி இண்டஸ்டிரீஸ், 2–1, 2 சோம், ஓட்டனுசசி, சியோடா, கு, டோக்கியோ–100. ஜப்பான் | ஜப்பான் என் 486,000,000/- |
| (2) ஒரு பெர்த்திங் டக் வழங்குதல் .. | 9 நாடுகளிலிருந்து கிடைத்த 17 கேள்விப்பத்திரங்கள் | தாஹி கம்பெனி டிமிட்டெட், சென்ஞரி பில்டிங் 9 (6) 8. சோம், குயிசா, சோமோ கு, டோக்கியோ–104. ஜப்பான் | ஜப்பான், என் 276,825,000/- |

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1, 1970 ந் ஆண்டு செப்டம்பர் மீ 25 ந் உ.

எல். எஸ். த சில்வா,
கப்பற்றுறை ஆணையாளர்க்காக.

10–132—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## சிறைச்சாலைப் பகுதி

### ஏல விற்பனை

***வத்துபிட்டிவல பால்யகுற்றவாளிகளின் பயிற்சிப் பாடசாலையின் தோட்டத்தில் ஐப்பசி மாதம் 16 ம் திகதி 1970 ஆண்டு கீழ்க்காணும் மிருகங்கள் ஏலத்தில் விற்கப்படும்.***

***(1) ஓர் பன்றி***
***(2) இரண்டு பெண்பன்றி***
***(3) பத்து பன்றிக் குட்டிகள்.***

கிழமை நாட்களில் முற்பகல் எட்டு மணியில் இருந்து பிற்பகல் நாலு மணிவரை இம் மிருகங்களை பார்வையிட அனுமதிக்கப்படுவர். ஏலத்தில் வெற்றி பெறுவோர் உடனடியாக பணத்தைக் கட்டுவதோடு மிருகங்களையும் அவ்விடத்தில் இருந்து அகற்றல் வேண்டும்.

ஈ. சி. பிரேமதிலக,
அதிகாரி,
பால்ய குற்றவாளிகள் பயிற்சிப் பாடசாலை,
வத்துபிட்டிவல.

*10-26/1—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926*

---

### வாயு மண்டல ஆய்வுப் பகுதி

### பயன் படத்தகாத பொருட்கள் விற்பனை

பயன்படத் தகாத பொருட்களும் உபகரணங்களும் பிரசித்த ஏலத்தில் 12. 10. 1970 மு. ப. 10.00 மணிக்கு வாயு மண்டலத் திணைக்களத்தில் விற்கப்படும்.

விற்பனைக்குரிய பொருட்களை 11. 10. 70 மு. ப. 10.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணிவரை பார்வையிடலாம்.

தேர்வு பெற்ற கேள்விக்காரர், அதே இடத்தில் பணம் செலுத்தி விற்பனையின் பின் பொருட்களை எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

எல். ஏ. டீ. ஐ எக்கநாயக்க,
அதிபர்,
வாயு மண்டல ஆய்வுப் பகுதி.

383, பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு-7,
1970. 9. 20.

*10-32—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926*

# நானாவித அறிவித்தல்கள்

## தேசிய வீடமைப்புத் திணைக்களம்

### இரத்மலானை அடுக்கு மாடி வீடுகள்

மேலே கூறப்பட்ட வீடமைப்புத் திட்டத்தில் மாடி வீடுகள் பெற்றுக் கொள்ள விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தகவுத் திறன் நிபந்தனைகள் பின்வருமாறு.—

(அ) விண்ணப்பகாரர் இலங்கைப் பிரசையாக இருக்கவேண்டும் ;

(ஆ) மாடி வீட்டை சாதாரண மாத வாடகை முறையில் பெறவிரும்பிய விண்ணப்பதாரருக்கு குடும்ப மாத வருமானம் ரூபா 300 க்குக் குறையாமலும் ரூபா 850 க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். வாடகை மூலம் கொள்வனவு செய்யும் முறையில் பெற விரும்பிய விண்ணப்பதாரருக்கு குடும்ப மாத வருமானம் ரூபா 450 க்கு குறையாமலும் ரூபா 950 க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ;

(இ) விண்ணப்பதாரர் விவாகமானவராகவும், குறைந்த பட்சம் ஒருவராவது அவரிற் தங்கியிருப்பவராகவும் இருத்தல் வேண்டும் ;

(ஈ) இலங்கையில் எந்தப் பகுதியிலாவது விண்ணப்பதாரருக்கோ அல்லது அவருடைய/அவருடைய, மனைவிக்கோ/கணவனுக்கோ அல்லது சார்ந்திருக்கும் பிள்ளைகளுக்கோ சொந்தமாகக் குடியிருப்பு வீடு ஒன்றேனும் இருத்தல் ஆகாது ;

(உ) விண்ணப்பதாரர் அல்லது அவருடைய/அவளுடைய, மனைவி/கணவன் இவ் வீடமைப்புத் திட்டத்திலிருந்து 10 மைல் சுற்றளவுக்குள் தொழில் பார்ப்பவர்களாகவோ அல்லது குடியிருப்பவர்களாகவோ இருத்தல் வேண்டும் ;

(ஊ) விண்ணப்பதாரருக்கு அல்லது அவருடைய/அவளுடைய, மனைவிக்கு/கணவனுக்கு இத்திணைக்களத்திலிருந்தோ அல்லது வேறு ஏதாவது நிறுவனத்திலிருந்தோ வாடகை மூலம் கொள்வனவு செய்யும் வீடு ஏற்கனவே பகிர்ந்தளிக்கப்படாமல் இருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பதாரர்கள் பின்வருவனவற்றைக் கவனித்தல் வேண்டும் :—

(அ) ஒவ்வொரு அடுக்கு மாடி வீட்டுக்கும் வாடகை கிட்டத்தட்டப் பின்வருமாறு :—

| | சாதாரண மாத வாடகை | | வாடகை மூலம் கொள்வனவு செய்யும் முறை (25 வருடங்கள்) |
|---|---|---|---|
| | ரூபா | | ரூபா |
| தரைத்தளம் மாதமொன்றுக்கு .. | 110 0 | .. | 175 0 |
| முதற்தளம் மாதமொன்றுக்கு .. | 95 0 | .. | 155 0 |
| இரண்டாந்தளம் மாதமொன்றுக்கு | 80 0 | .. | 125 0 |
| மூன்றும் தளம் மாதமொன்றுக்கு | 75 0 | .. | 120 0 |

(ஆ) ஒவ்வொரு மாடி வீட்டிலும் இரண்டு அறைகளும், ஒரு வசிக்கும் அறையும் உண்டு. அதன் முழுத் தளப்பரப்புக் கிட்டத்தட்ட 400 சதுர அடிகளாகும் ;

(இ) வாடகைக் கொள்வனவு முறையில் மாடி வீடுகள் எடுக்கப்பட்டுமிடத்து தெரிந்தெடுக்கப்பட்ட வாடகைக் குடியிருப்பாளருக்கு காலகதியில் நிர்மாணிக்கப்படும் நிபந்தனைகளுக்கமைய அவைகளின் உரிமை வழங்கலுக்கென நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஈ) மாடி வீடுகள் வாடகைக் கொள்வனவு முறையில் பகிர்ந்தளிக்கையில் கொள்வனவு விலையின் கணிசமான பகுதியைச் செலுத்துவோருக்கு விசேட கவனம் செலுத்தப்படும். வாடகைக் கொள்வனவுக் குடியிருப்பாளர் குறைந்தது ரூபா 1,500 முன் கூட்டியே வைப்புப்பணமாகச் செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுவர். இந்த வைப்புப் பணம் கொள்வனவு விலைக்கு எதிராக ஈடு செய்யப்படும். சாதாரண மாதவாடகை முறையிற் பெறுபவர்கள் 3 மாத வாடகையை முற்பணமாகச் செலுத்த வேண்டும். **சாதாரண மாத வாடகை முறையிலோ அல்லது வாடகை மூலம் கொள்வனவு செய்யும் முறையிலோ மாடி வீடு தேவைப் படுகின்றதென்பதைத் தெளிவாகக் குறிப்பிடுக.**

(உ) மாடி வீட்டை சாதாரண மாத வாடகைத் திட்டத்திலோ அல்லது வடகைக் கொள்வனவுத் திட்டத்திலோ கொடுக்கப்பட வேண்டும் என்பதையும் எந்தத் தட்டில் மாடி வீடு கொடுக்கப்பட வேண்டுமென நிச்சயப்படுத்தும் பொழுதும் விண்ணப்பதாரரின் வருமானம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். அதாவது விண்ணப்பதாரரின் வருமானம் வாடகைத் தொகையின்/வாடகைக் கொள்வனவுத் தொகையின் நாலு மடங்கிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். தேசிய வீடமைப்பு ஆணையாளர் தனது தீர்மானத்துக்கிணங்க இவற்றைப் பகிர்ந்தளிக்கும் அதிகாரத்தை உடையவராவர். விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வாடகைக்கோ வாடகைக் கொள்வனவு முறைக்கோ அடுக்கு மாடிகளின் தொகுதியின் ஒவ்வொன்றையும் பிரித்துக் கொடுப்பதற்கு ஆணையாளருக்கு உரிமை உண்டு.

4. சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தை, கொழும்பு 2 இல் உள்ள தேசிய வீடமைப்புத் திணைக்களத்திலிருந்து 50 சதத்திற்குப் பெறக்கடிய அச்சிட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் நிரப்பப்பட்டுப் **பதிவுத் தபால் மூலம்** 1970 அக்டோபர் 18 ம் தேதியில் அல்லது அதற்கு முன்னராகத் தேசிய வீடமைப்பு ஆணையாளரை அவை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். தபால் உறையின் மேலே இடது பக்க மூலையில் "இரத்மலானை மாடி வீடுகளுக்கான விண்ணப்பம்." எனக் குறிக்கப்படல் வேண்டும்.

5. ஏற்கனவே ரூபா 1,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை வைப்புப் பணமாகச் செலுத்தியவர்கள் விண்ணப்பிக்க வேண்டியதில்லை. 1969 மார்ச் மாதம் 29 ம் தேதியில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் சார்பாக விண்ணப்பித்து அதற்கிணங்கத் தெரிவு செய்யப்படாதவர்களும் வைப்புப் பணம் கட்டுமாறு கேட்கப்பட்டு அவ்வாறு செய்யாதவர்களும் **புதிதாக விண்ணப்பிக்க வேண்டும்.**

ஐ. எ. சி. பெர்னாண்டோ,
பதில் தேசிய வீடமைப்பு ஆணையாளர்.

தேசிய வீடமைப்புத் திணைக்களம்,
கொழும்பு 2.
1970 ம் ஆண்டு செப்டம்பர் மீ 21 ந் உ.

10-105—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 11,926

அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய இரய விகிதங்கள்

1.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது

# இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)

வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும், மற்றும் நாட்களில் மு.ப. 9 மணி முதல் பி.ப. 4.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி.ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க எதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்ரரால் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட இரய விகிதங்கள் 1968 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | | | | ரூ. | ச. |
|---|---|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | .. | .. | .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | | .. | .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | .. | .. | .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | | .. | .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் இரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாறுப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்து சேரவேண்டும்.

13. சந்தா விபரம் 1.12.69 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | | | | உள்ளூர் | | | வெளியூர் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூ | ச. | | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் | .. | .. | .. | 46 | 0 | .. | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு | .. | .. | .. | 36 | 0 | .. | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் | | .. | .. | 43 | 50 | .. | 51 | 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | | | விலை ரூ. ச. | | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | (i) | வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. | .. | 0 50 | .. | 20 |
| | (ii) | வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. | .. | 1 0 | .. | 20 |
| (ஆ) | (i) | வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | .. | 0 30 | .. | 15 |
| | (ii) | வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | .. | 0 60 | .. | 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர்,** தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**அட்டவணை—1970**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| செத்தெம்பர் | 4. 9.70 | வெள்ளி | 28 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 11. 9.70 | வெள்ளி | 4. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 18. 9.70 | வெள்ளி | 11. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 25. 9.70 | வெள்ளி | 18. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| ஒற்றோபர் | 2.10.70 | வெள்ளி | 25. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9.10.70 | வெள்ளி | 2.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 16.10.70 | வெள்ளி | 9.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 23.10.70 | வெள்ளி | 16.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 30.10.70 | வெள்ளி | 23 10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| நவெம்பர் | 5.11.70 | வியாழன் | 30 10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.11.70 | வியாழன் | 5.11.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 20.11.70 | வெள்ளி | 12.11.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 27.11.70 | வெள்ளி | 20.11.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| திசெம்பர் | 4.12.70 | வெள்ளி | 27.11.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 11.12.70 | வெள்ளி | 4.12.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 18.12.70 | வெள்ளி | 10.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 24.12.70 | வியாழன் | 17.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 31.12.70 | வியாழன் | 24.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு யூன் மீ 2 ஆந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.